
வருடம் 38 வெளியீடு 1

# சத்தியவசனம்


## சஞ்சிகை


ஜனவரி
பெப்ரவரி
மார்ச்


**2010**











யாவையும் அறிந்துகொண்டு

கிறிஸ்தவரல்லாத ஞானி கண்ட கிறிஸ்து

குழந்தை இயேசுவா, மன்னன் கிறிஸ்துவா

தேவனை அறிந்துகொள்ளல்

நாட்களை எண்ணும் அறிவு

**காலம் நிறைவேறினபோது, ...தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்!**

இலங்கை சத்தியவசனம் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - மார்ச் 2010

வருடம் - 38

வெளியீடு - 1

# சத்தியவசனம்

சஞ்சிகை

## பொருளடக்கம்

பக்கம்


| | |
|---|---|
| **சில சம்பவங்களில் சில சத்தியங்கள்** - சகோ எம். எஸ். வசந்தகுமார் | 04 |
| **யாவையும் அறிந்துகொண்டு** - சகோதரி சாந்தி பொன்னு | 06 |
| **கிறிஸ்தவரல்லாத ஞானி கண்ட கிறிஸ்து** - டாக்டர் புஷ்பராஜ் | 09 |
| **குழந்தை இயேசுவா, மன்னன் கிறிஸ்துவா?** - சகோ பிரேம்குமார் | 11 |
| **தேவனை அறிந்துகொள்ளல்** - சகோ சுபாஷ் சுந்தரலிங்கம் | 14 |
| **கேள்வி பதில்** - டாக்டர் ஆர். ஸ்டான்லி | 16 |
| **சீஷத்துவமும் கர்த்தத்துவமும்** - சகோ வஷ்னீ ஏனர்ஸ்ட் | 21 |
| **நாட்களை எண்ணும் அறிவு** - சகோ நீரியஸ் பெர்னாண்டோ | 24 |
| **சிறுவர் சோலை** | 28 |
| **சந்தா படிவம்** | 30 |



நிர்வாக இயக்குநர் : திரு. மயுக பெரேரா

முதன்மை ஆசிரியர் : திரு. நீரியஸ் பெர்னான்டோ

உதவி ஆசிரியர் : திரு. வஷ்னீ ஏனர்ஸ்ட்



**Sathiyavasanam**

P.O. Box 1012, Colombo, Sri lanka.

Tele & Fax : 011-2695441, 011-2698843

E-mail : svsl@backtothebible.lk

Web : www.sathiyavasanam.lk


BACK TO THE BIBLE®

சத்தியவசனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**‘காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்’**

**(கலாத்தியர் 4:5)**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் சத்தியவசன அன்பர்களாகிய உங்களுக்கு சத்தியவசன ஊழியர்கள் அனைவரின் சார்பாக எமது நத்தார் மற்றும் புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். பிறக்கவிருக்கும் புதிய வருடம், உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும், ஆண்டவரின் தெய்வீக பாதுகாப்பும் உன்னத ஆசீர்வாதங்களும் நிறைந்த நல்லாண்டாக அமைய வாழ்த்துகிறோம்.

நீதிமொழிகள் புத்தகத்திலே சாலமோன் ஞானி, “நிச்சயமாகவே முடிவு உண்டு, உன் நம்பிக்கை வீண்போகாது” (நீதிமொழிகள் 23:18) என்று எழுதும்போது உண்மையில் அவர் எதைத் தன் மனதிற்கொண்டு அப்படி எழுதினார் என்பதை நம்மால் யூகிக்க முடியாதுள்ளது. ஆனால், இந்த உலகத்தில் நாம் எதை எடுத்துக்கொண்டாலும் நிச்சயமாகவே அதற்கு ஒரு முடிவு உண்டு என்பதை நாமறிவோம். அருமையானவர்களே, ஒருவேளை நீங்கள் முகங்கொடுக்கும் அநீதி அக்கிரமம் கொடுமை வேதனை துக்கம் எதுவானாலும் அவை அனைத்திற்கும் “நிச்சயம் ஒருநாள் முடிவு உண்டு”. ஆனால் சிலசமயங்களில் ஆண்டவர் ஒன்றுமே பேசாததுபோலவும் நம்முடைய கூக்குரலுக்குச் செவிகொடாதது போலவும் தோன்றலாம். ஆனாலும் அவர் ஏற்றநேரத்தில் செயல்படுவார் என்பது நிச்சயம். அதைத்தான் கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு வெளிப்படுத்துகின்றது.

இயேசு கிறிஸ்துவாகிய மேசியா, மக்களைப் பாவத்திலிருந்தும் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிக்க வருவார் என ஆண்டாண்டு காலமாக மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஆனாலும் “காலம் நிறைவேறினபோது, ...தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்” என்பதாக வேதம் நமக்குக் கூறுகின்றது. ஆம், அதினதின் காலத்திலே சகலத்தையும் நேர்த்தியாகச் செய்பவர் நம்முடைய பரம தகப்பன். நமக்கு எது தேவை என்பதை மட்டுமல்ல, அதை எப்போது தரவேண்டும் என்பதையும் அவர் நன்கு அறிவார். எனவே சகலத்தையும் அறிந்த நம்முடைய ஆண்டவரிடத்தில் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை ஒருபோதும் வீண்போகாது. நம்முடைய வேதனைக்கும் துக்கங்களுக்கும் நிச்சயம் நம்முடைய ஆண்டவரிடத்திலே முடிவு உண்டு என்ற விசுவாசத்தோடு அவரையே நம் நம்பிக்கையாகக் கொண்டவர்களாக இனிய புதிய வருடத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்குவோமாக.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!



கர்த்தரின் பணியில்,

அன்புடன்

நீரியஸ் பெர்னாண்டோ

(சத்தியவசனம் - தமிழ்ப்பணி பொறுப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில சம்பவங்களில் சில சத்தியங்கள்!

உவமைகளில் உண்மைகள் - எம் எஸ் வசந்தகுமார் -

## உலகைச் சிருஷ்டித்த தேவன்!

புவியீர்ப்புச்சக்தி இருக்கின்றது என்பதைக் கண்டுபிடித்தவர் சேர் ஐசக் நியூட்டன் எனும் விஞ்ஞானி யாவார். அவர் ஒருசமயம், சூரியனைச் சுற்றி பல்வேறு கிரகங்கள் சுற்றுவதுபோன்ற மாதிரி உருவம் ஒன்றினை தன்னுடைய மேசையின் மீது செய்து வைத்திருந்தார். அதைப் பார்த்த நியூட்டனின் உதவியாளர் ஒருவர் அவரிடம் "இதைச் செய்தது யார்?" என்று கேட்டார்.

நாத்திகரான அந்த உதவியாளருக்குச் சரியானதொரு பதிலொன்றைக் கற்றுக்கொடுக்கக் கூடிய சந்தர்ப்பத்தினை எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஐசக் நியூட்டன், "அந்த மாதிரி உருவத்தை யாரும் உருவாக்கவில்லை. அது தானாகவே வந்தது" என்று உறுதிப்படக் கூறினார்.

நியூட்டனின் இவ்வார்த்தைகளை நம்ப மறுத்த அந்த உதவியாளர் "இவ்வளவு அழகான மாதிரி உருவம் எப்படி தானாகவே வந்திருக்க முடியும்?" என்று திருப்பிக் கேட்டார்.

"சாதாரண ஒரு மாதிரி உருவத்தை உருவாக்குவதற்கே ஒருவர் தேவை என்றால், சூரியனையும் கிரகங்களையும் உருவாக்கத் தேவன் என்றொருவர் இருந்திருக்க வேண்டும் அல்லவா?" என்று தன் நாத்திக உதவியாளருக்குப் பதிலளித்தார் சேர் ஐசக் நியூட்டன் அவர்கள்.

நாம் வாழும் உலகம் தானாய் உருவான தொன்றல்ல. அது நம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட உலகம். இதைப் பற்றி வேதாகமம் பின்வருமாறு கூறுகின்றது, "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்." (ஆதி.1:1). "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை." (யோவான் 1:3).

"விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் (மூல மொழியில் பிரபஞ்சம்) தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்." (எபி. 11:3). மேலும் யோவான் இயேசுவைக்குறித்து கூறும் போது, "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை." எனவும் கூறுகின்றார். சேர் ஐசக் நியூட்டனின் உதவியாளரைப்போல இன்று எத்தனைபேர் கர்த்தரை அறியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்? அவர்களுடைய அறிவுக் கண்களை நாம் திறக்க வேண்டாமா?

பிரசங்கி இவ்விதமாக கூறுகின்றார், "அவர் (இறைவன்) சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்." (பிரசங்கி 3:11)

சங்கீதக்காரன் இவ்விதமாக அனுபவத்திலிருந்து பாடுகின்றான், "பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்." (சங்கீதம் 90:2) என்பதாக. ஆம், "பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது."(சங்கீதம் 24:1). ஆம், இந்த உண்மையை யாராலும் மாற்றமுடியாது.

"நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத்தேயு 28:20) என்று வாக்களித்த இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு அவரை விசுவாசித்து அவருடனே வாழ எம்மை அர்ப்பணிப்போமாக.

## மனிதனை மாற்றும் வேதாகமம்!

ஆபிரிக்க நாடொன்றின் அடர்ந்த காட்டினூடாகச்சென்று கொண்டிருந்த நாத்திகன் ஒருவன், வேதாகமத்தை வாஞ்சையுடன் வாசித்துக்கொண்டிருந்த ஒரு வயோதிபரைக் கண்டான். வயோதிபருடைய செயல் நாத்திகனுக்கு ஏளனமானதாகத் தென்பட்டமையால், "இந்த இருபதாம் நூற்றாண்டில் யாராவது ஆர்வத்துடன் வேதாகமத்தை வாசிப்பார்களா?" என்று ஒருவித கேலியுடன் அவரிடம் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சத்தியவசன வாசகர்கள்,
வானொலி நேயர்கள், விசுவாச தோழர்கள்,
ஜெப பங்காளர்கள், முன்னாள் ஊழியர்கள்
அனைவருக்கும் எமது சத்தியவசன
நிறுவனத்தினதும் ஊழியர்களினதும்
கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு
நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்!

நாத்திகனுடைய ஏளனமான கேள்விக்குப் பதிலளித்த வயோதிபர், அருகிலிருந்த கல்லொன்றையும், பானையொன்றையும் சுட்டிக்காட்டியவாறே, "இப் புத்தகம் எனக்குக் கிடைத்திராவிட்டால், இந்தப் புத்தகத்தின் இயேசு கிறிஸ்து என்னை மாற்றியிராவிட்டால், இந்தக் கல்லினால் உன்னை அடித்துக்கொன்று இந்தப் பானையில் உன்னைப் போட்டுச் சமைத்து அருமையான ஒரு விருந்தாக்கியிருப்பேன்" என்று கூறினான்.

வேதாகம வசனங்கள் ஜீவனும் வல்லமையும் உடையவை (எபிரெயர் 4:12) என்பதற்கு இச் சம்பவம் சிறந்த விவரணமாயுள்ளது. அவை நரமாமிசப் பட்சினியையும் நல்லவனாய் மாற்றியுள்ளது. வேத வசனங்கள் ஜீவனுள்ள தேவனுடைய வசனங்களாய் இருப்பதனால் (யோவான் 6:63, 2தீமோ.3:16) அதற்கு மனிதர்களை மாற்றக்கூடிய வல்லமை இருக்கின்றது. அது பயங்கரமான பாவியையும் பரிசுத்தவானாக மாற்றுகின்றது.

ஜப்பான் நாட்டுச் சிறையில் "டொகிசி இஷி" எனும் பெயருடைய கைதியொருவன் இருந்தான். பயங்கரமான குற்றவாளியான இவன் பெண்கள் சிறுவர்கள் உட்பட பலரைக் கொடூரமான முறையில் கொலைசெய்துள்ள ஈவிரக்கமற்ற மூர்க்கமான ஒரு மனிதனாவான். ஒருநாள் கனடா நாட்டைச் சேர்ந்த இரு பெண்கள் டொகிசி இஷி இருந்த சிறைச்சாலைக்கு விஜயம் செய்தனர். டொகிசி இஷி அவர்களை மூர்க்க வெறியுடன் பார்த்தானே தவிர, அவர்கள் தன்னுடன் எதைப் பற்றியும் பேசுவதற்கு அவன் அனுமதிக்கவில்லை. இதனால் அப்பெண்கள் ஒரு வேதாகமத்தைச் சிறைக்கூட்டுக்குள் வைத்து விட்டுச் சென்றனர்.

இரவில் டொகிசி இஷி வேதாகமத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினான். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைப் பற்றி அவன் வாசித்தவைகள் அவனது மனதை மாற்றியது. அடுத்தநாள் காலை சிறைக்காலவர்கள் அவனிருந்த இடத்திற்கு வந்தபோது ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டனர். வழமையாக மூர்க்கத்தனமாக நடந்துகொள்ளும் டொகிசி இஷியினுடைய முகம் அன்று புதுப் பொலிவுடனும் சாந்தத்துடனும் இருந்தது. ஆம், வேதாகம வார்த்தைகள் அவனை முற்றிலுமாய் மாற்றிவிட்டன.

"ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போக விடுகிறீர்." (லூக்கா 2:29). ❑

---

# உன்னதர் உலகில் கொண்ட நாட்டம்

பறந்தோடி மறைந்திடும் என் துக்கம்
பரிசுத்தர் அவரே என்றும் என் பக்கம்
தொல்லை துன்பங்கள் இன்றே நீக்கம்
தொழுதிடும் நான் துணையாளரின் ஆக்கம்.

வேண்டாம் இழிபாவம் எச்சம்
வேகமாய் நோக்கிடுவேன் ஜீவ வெளிச்சம்
மகிபனின் புதுவாழ்வே இனி மிச்சம்
மறுப்பின்றி பறந்தோடும் என் அச்சம்.

உடைத்திடுவார் சாத்தானின் திட்டம்
உன்னதர் உலகில் கொண்ட நாட்டம்
களிப்புடனே துதித்திடும் தூயவர் கூட்டம்
சாத்தான் எடுத்திடுவான் பெரும் ஓட்டம்.

என் அப்பாவின் அன்பின் சத்தம்
என் வாழ்வின் இனிய சித்தம்
என்றும் மாறா வாக்குத் தத்தம்
எனை ஆண்டு நடத்துவார் நித்தம்.

அவரே வாழ்வின் என் ஜீவ அப்பம்
அன்றாடம் நான் மிதக்கும் தெப்பம்
பரிசுத்தமே என்றும் என் மோப்பம்
பரனோடு வாழ்வதே மகிழ்ச்சி ஏப்பம்.

சத்துரு போட்டிடுவான் பாவக் குற்றம்
சடுதியாய் ஓடிடுவேன் இயேசுவின் முற்றம்
வெட்கி அவன் அடைந்திடுவான் பதற்றம்
வெற்றிவேந்தன் தந்திடுவார் வாழ்வில் ஏற்றம்.

எஸ். தர்மகுலசிங்கம் ~ கொழும்பு 4 .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சகோதரி சாந்தி பொன்னு -

# யாவையும் அறிந்துகொண்டு.....



'நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்.' (ஏசாயா 9:6).

அவன் ஒரு வாலிபன். எதிர்பாராத திருப்பம் ஒன்று அவன் வாழ்விலே ஏற்பட்டது. ஏனெனில் அவன் தன் இளவயதிலேயே கிட்னி வியாதியினால் பாதிக்கப்பட்டான். மனம் உடைந்தான். வைத்தியம் ஆரம்பித்தது. பயங்கரமான வைத்தியம். வைத்திய நடைமுறைகள் அவன் சரீரத்தையும் மனதையும்கூட வேதனைக்குள்ளாக்கியது. இந்நிலையில் அவனுக்கு ஓர் ஆறுதல், ஓர் அன்பு வார்த்தை, ஓர் அரவணைப்பு அவசியமல்லவா!

அழகு, அந்தஸ்து, செல்வாக்கு, பணம், பொருள், படிப்பு, தொழில், குடும்பம், ஜாதி என்றெல்லாம் கவனிக்கின்ற இச் சமுதாயத்திலே, தன் வாழ்நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் இந்த வாலிபனை, நாளைக்கு என்னவாகுமோ என்று தத்தளிக்கும் இந்த வாலிபனை, ஒவ்வொரு தடவையும் வைத்தியரிடம் போகும் நாள் கிட்டும்போது அவர் இன்று என்ன சொல்லுவாரோ என்று கலங்கி நிற்கும் இவ்வாலிபனை, நாளுக்குநாள் செயற்பாட்டிலே குறைவுபட்டுக்கொண்டிருக்கும் கிட்னிகளை உடைய இந்த வாலிபனை மணமுடிக்க எந்தப் பெண் முன்வருவாள்?

ஆனால் ஒருத்தி வந்தாள். அவளை யாரும் மணமுடிக்க விரும்பாததால் அல்ல; ஏற்ற திருமண ஒழுங்கு கிடைக்காததால் அல்ல; திருமண ஆசையினாலும் அல்ல; சில நாட்கள் வாழ்ந்தாலும் கர்த்தருக்கென்று எதையாவது செய்யவேண்டும் என்ற ஒரே வாஞ்சையினால், கர்த்தருக்கென்று பிரயோஜனமான எதையாவது செய்யவேண்டும் என்ற ஒரே உறுதியினால் இந்த வாலிபனைக் குறித்து பெரியவர்கள் சொன்னபோது, பல நாட்கள் ஜெபத்தில் இருந்து ஒரு திடமான முடிவுக்கு வந்தாள் அப்பெண். மனமுவந்து, பிறருடைய எதிர்ப்புகளைக் கணக்கில் வைக்காது, தன் கணவனாக வரப்போகிறவன் எப்படிப்பட்டவன், தனக்கு எதுவும் எப்பவும் நடக்கலாம் என்பதையெல்லாம் அறிந்திருந்தும், தைரியமாக தேவ பயத்தோடு, தேவனுக்குப் பணிசெய்யும் ஒரே தூய்மையான மனப்பான்மையோடு இந்த வாலிபனை மணம்முடிக்க முன்வந்தாள் இந்தப் பெண். பரிசுத்த விவாகமும் தேவ சந்நிதானத்திலே நிறைவேறியது.

இது வெறும் கட்டுக்கதை அல்ல. இந்த நவீன காலத்திலும் ஆசைகளுக்கும் இச்சைக்கும் மனிதன் அடிமைப்படுகின்ற இந்த நவீனயுகத்திலும் இப்படிப்பட்ட வர்களைக் கர்த்தர் வைத்திருக்கிறார். இத்தம்பதியினரை நானே நேரில் சந்தித்தேன். 'என் அருமை மனைவியே நீ இவ்வளவு நாட்களும் எங்கிருந்தாய்?' என்று அன்பு பொங்கக் கேட்கும் கணவனும், புன்முறுவலுடனும் உற்சாகத்துடனும் தன் கணவனுக்கும் ஆண்டவருக்கும் சேவை செய்யும் இந்த மனைவியும் அநேக வருடங்கள் வாழவேண்டும் என்று, யாவையும் அறிந்துகொண்டு நமக்காகத் தம்மையே தந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இவர்களை மனமார வாழ்த்தினேன். இன்னும் வாழ்த்துகிறேன். இருவரும் இணைந்து தேவ பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

கிறிஸ்மஸ் காலங்களில் பலவிதமான நத்தார் செய்திகளை நாம் கேட்டிருக்கிறோம், வாசித்திருக்கிறோம். இயேசு பிறந்தார், தாழ்மையின் கோலத்தில் வந்தார் என்றெல்லாம் பலவிதமான செய்திகள். இவை நல்லது. ஆனால் அவை நமது வாழ்வில், இதுவரை என்ன மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கிறது என எப்பொழுதாவது அமர்ந்திருந்து சிந்தித்திருக்கிறோமா? கிறிஸ்மஸ் நாட்கள் சமீபிக்கும் முன்னதாகவே கரோல் பாடல் பயிற்சியை ஆரம்பித்து விடுகிற நாம், நம்மைத் தேடி வந்த இரட்சகர் நமது வாழ்வில் இடைபடுகின்ற பயிற்சியிலே எவ்வளவுதூரம் ஆர்வம் காட்டுகிறோம்? இன்று எங்கு பார்த்தாலும் நவீனங்களே சகலத்தையும் ஆட்கொண்டிருக்கிறது. கரோல்போட்டி நிகழ்ச்சி நடத்துவதாக ஒரு தொலைக்காட்சி நிறுவனம் விளம்பரம் விடுத்திருப்பதைப் பார்த்தபோது உள்ளம் உடைந்தது. இயேசு பிறந்த பரிசுத்த செய்தி இன்று பணம் பறிக்கும் செய்தியாக மாறிவிட்டதே. இவற்றால் நமது உணர்ச்சி தூண்டப்படுகின்றதே தவிர, நாம் உணர்வுள்ளவர்களாக மாறுகிறோமா என்பது கேள்விக்குறியே!

**அனுப்பப்பட்ட இயேசு:**

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்." ஏசாயா 9:6. இந்த வசனத்தில் 'கொடுக்கப்பட்டார்' என்ற சொல்லைக் கவனியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் எதிர்பாருங்கள் ....

BACK TO THE BIBLE சத்தியவசனம்

உங்களுக்கு அறிமுகமான புதிய கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு கிறிஸ்மஸ் அன்பளிப்பாக கொடுக்கக்கூடிய ஒரு அருமையான பரிசு

இது ஒரு புதிய சத்தியவசன DVD வெளியீடு...

"ஜெபம் என்றால் என்ன? நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்? நாம் யாரிடம் ஜெபிக்கவேண்டும்? நாம் எப்படி ஜெபித்தால் கடவுள் நம் ஜெபத்தைக் கேட்பார்? நம்முடைய ஜெபத்துக்கு கடவுள் பதில் கொடுக்காதது ஏன்?"

இதுபோன்ற பல ஜெபத்தைக் குறித்த கேள்விகளுக்கு பரிசுத்த வேதாகமம் என்ன கூறுகின்றது என்பதைக் குறித்து

**சகோதரர் நீரியஸ் பெர்னான்டோ**

அவர்களின் நான்கு செய்திகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

**DVD ஒன்றின் விலை 300/=**

(தபால் செலவு தனி)

மேலதிக விபரங்களுக்கு :



**Back to the Bible Bookshop**

120 A, தர்மபால மாவத்தை

கொழும்பு 07

தொலைபேசி: 011 2687040, 011- 2695441


தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (யோவான் 3:16). இது நமக்கு மனப்பாடமான வசனம். இந்த வசனத்திலே, 'அவரைத் தந்தருளி...' என்ற பகுதியைக் கவனியுங்கள். மேலும், '...தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி.....' (ரோமர் 8:3).

இந்த வசனத்திலும் 'குமாரனை அனுப்பி....' என்ற பகுதியைக் கவனியுங்கள். மேலும், '...நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே.....' (1யோவான் 4:10). இதிலேயும் "அனுப்பினதினாலே" என்ற சொல்லைக் கவனியுங்கள்.

ஆம், இயேசு தற்செயலாக வந்து பிறக்கவில்லை. மானிடன் மீது தேவன் அநாதியாய்க்கொண்ட திட்டத்தின்படி பிதாவினாலே நமக்குக் கொடுக்கப்பட்டவர்தான் இயேசு. எதற்காகக் கொடுக்கப்பட்டார்? நாம் சுக செல்வங்களை அனுபவிக்கவா? களியாட்டங்களில் ஈடுபடவா? இல்லை. நமது பாவங்களுக்காக, பாவங்களை நிவர்த்தி செய்யும் பலியாகவே அவர் அனுப்பப்பட்டார். இன்று நாம் மகிழ்ச்சியாயிருக்கிறோம் என்றால் அன்று ஒருவர் பாடுபட்டார் என்பதை நாம் ஏன் சிந்திப்பதில்லை? இன்று நாம் கிறிஸ்தவர்கள் என்று முழங்குகிறோம் என்றால் அன்று ஒருவர் நாம் ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்காக தமது ஜீவனைக்கொடுத்தார் என்பதை அறிந்திருந்தாலும் ஏன் உணருவதில்லை?

நத்தார் செய்தி இயேசு பிறந்தார் என்பதல்ல. அவர் மரிப்பதற்கென்றே பிறந்தார் என்பதுதான் செய்தி. மரித்து உயிர்த்து நாம் இழந்துபோன நித்திய ஜீவனை பெற்றுத் தந்தார் என்பதுதான் செய்தி. ஆக, நாம் புரிந்து கொள்ளவேண்டிய விடயம் என்னவெனில், கிறிஸ்து, தாம் எதற்காக அனுப்பப்பட்டார் என்பதை அறிந்துகொண்டே, அதைத் தெரிந்துகொண்டு, தமக்கு என்ன நடக்கும் என்பதை உணர்ந்துகொண்டு தம்மை கொடுப்பதற்கென்றே உலகிற்கு வந்தார். அல்லாமல், வந்த இடத்தில் அவர் மரணத்தை சந்திக்கவில்லை. நம்மைப்போல பிறந்த எவனும் இறக்கவேண்டும் என்ற நியதிப்படி அவர் மரிக்கவுமில்லை.

## அதிகாரம் யார் கையில்?:

(முடிவைக் குறித்து (சரீர மரணம்) அறிந்திராத இவ்வுலக வாழ்வின் அதிகாரம் தேவ கரத்தில்தான் இருக்கிறது. ஆனால் உலகில் பாடுகளும் நித்தியத்தில் மகிழ்ச்சியும் உண்டாகும் என அறிந்திருக்கும் எமது கிறிஸ்தவ ஓட்டத்தைக் குறித்த தெரிவை தேவன் நமது கைகளில்தான் தந்திருக்கிறார். நாம் விரும்பினால் கிறிஸ்துவின் வழிநடக்கலாம் அல்லது உலக வழியில் நடக்கலாம். ஆனால் 'கிறிஸ்தவன்' என்று சொல்லிக் கொண்டு 'கிறிஸ்து பிறந்தார்' என்று பாடிக்கொண்டு கிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கிறவர்களாக நாம் வாழக்கூடாது.

அன்று பிலாத்து, "உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா" என்று இயேசுவை மிரட்டினான். ஆனால் இயேசுவோ, "பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது" என்று தைரியமாகப் பதிலளித்தார். (யோவான் 19:11).

'நான் என் ஜீவனைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள மாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன்' என்றார் இயேசு. (யோவான் 10:18).

இயேசுவின் பிறப்பு தொடக்கம் அவர் பரமேறிய வரைக்கும் சகலமும் பிதாவின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்தது. சகலத்தையும் அறிந்தவராகவே இயேசு உலகிலே வந்து பிறந்தார். நம் வாழ்வில் அடுத்த நிமிஷம் என்ன நடக்கப்போகிறது என்பதை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அறிவோமா? சிலர் அதை அறிவதற்காக சாஸ்திரங்களை நாடுகிறார்கள்; அது முடிகிறதா? முடியாது. ஏனெனில் நாம் மனிதர். நாம் நம் தேவனுடைய கரத்தில் இருக்கிறோம். சகல ஆளுகையும் அதிகாரமும் அவர் கைகளில் இருக்கிறது. நமது தொடக்கம் மாத்திரமல்ல, முடிவையும் அறிந்தவராகிய பிதாவின் கரத்திலேதான் நாம் இருக்கிறோம். அவர் நடத்த நாம் நடக்கிறோம். இது சம்பவங்களையும் வாழ்வின் நிலைகளையும் குறிப்பதாய் உள்ளது.

**நாமும் அறிந்த ஒரு விடயம்:**

ஒரு விடயம் உண்டு. அதிலே நமக்கு என்னவாகும் என்பது நமக்குத் தெரியும். நமது முடிவு என்னவென்றும் தெரியும். அதுதான் கிறிஸ்துவின் வழியில் நடத்தல். கிறிஸ்து வழிநடந்தால் என்ன நடக்கும் என்று நமக்குத் தெரியும். கிறிஸ்துவுக்காய் வாழ எத்தனிக்கும்போது இவ்வுலகில் என்ன பலன் கிடைக்குமென்பதும் தெரியும். அதனால்தானோ என்னவோ நமது வழிகளை நாம் அடிக்கடி மாற்றிப் போடுகிறோம். சத்தியவசனங்களை அடிக்கடி திருப்பிப்போடுகிறோம். கொண்டாட்டங்களில் கருப்பொருள்களையே மறந்துபோடுகிறோம்.

ஆரம்பத்திலே சீஷர்கள் தமக்குள்ளாகவே ஒரு கற்பனையை வளர்த்துக்கொண்டு, இயேசு ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது, தாமும் உயர்நிலையிலிருக்கலாம் என்று நினைத்தனர். இதனால் தமக்கு சாதகமில்லாத சமயங்களிலெல்லாம் தடுமாறி பின்வாங்கினர். ஆனால் எப்போது அவர்கள் கண்கள் திறக்கப்பட்டனவோ, எப்போது தங்கள் முடிவு என்னவாக இருக்கும் அல்லது தமக்கு இவ்வுலகம் என்ன பரிசு கொடுக்கும் என்பதையெல்லாம் அறிந்தபோது அவர்கள் பின்வாங்கிவிடவில்லை. பரிசுத்த பவுல் ரோமாபுரிக்கு கொண்டு செல்லப்பட்ட இறுதி பயணத்தில் கப்பல் நடுக்கடலிலே தத்தளித்தது. ரோமாபுரியில் தனக்கு என்னவாகும் என்பதை பவுல் நன்கறிந்திருந்தும், இனி தான் தப்பிப் பிழைக்க வகையில்லை என்பது நன்குதெரிந்திருந்தும், கப்பலிலிருந்து தப்பித்துக்கொள்ள வகைதேடாமல், துக்கத்தோடிருந்த மற்றவர்களை ஆறுதல்படுத்தி, அவர்களுக்கு உணவு கொடுத்தாரே. இந்த உணர்வு நமக்குண்டா?

ஆம், உண்மை! தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடப்பதும், வார்த்தையை நமது வாழ்க்கையாகக் கொள்வதும், கிறிஸ்து எனக்குள் வாழ இடம் அளிப்பது கடினமான பாதை என்பது தெரியும். ஆனால் அதன் முடிவோ நித்திய பலனைக் கொடுக்குமென்பதை நாம் அடிக்கடி மறந்துபோகிறோம். கிறிஸ்து தன் சகல காரியங்களையும் அறிந்துகொண்டே உலகில் வந்து பிறந்தார். அந்த இயேசு வழி, நீ நடந்தால் உனக்கு என்னவாகும், சிலுவை சுமத்தல் என்பது என்னவென்பதையெல்லாம் அறிந்திருக்கும் நீ, விசேஷமாக இந்த கிறிஸ்மஸ் காலத்தில், இயேசு பிறப்பை லாபம் ஈட்டும் கொண்டாட்டமாக மாற்றிவிட்ட இந்த உலகத்தின் மத்தியில் கிறிஸ்து வழிநடக்க நீ முன்வருவாயா? உன் கொண்டாட்டங்கள் ஆராதனைகள் யாவையும் உணர்வுள்ளவைகளாக மாற்ற முயற்சிப்பாயா? தன்னையே உனக்குப் பரிசாகத் தந்த இயேசுவுக்கு நீ என்ன பரிசு கொடுக்கப்போகிறாய்?

கிட்னி பழுதடைந்த நிலையிலுள்ளவர்களுக்கு கொடுக்கப்படும் 'டயலிஸிஸ்' என்ற வைத்தியமுறை மிகவும் வேதனையானது. ஒவ்வொருமுறையும் அந்த சிகிச்சைக்குச் செல்லும்போது மேலே குறிப்பிடப்பட்ட சகோதரன் எப்படி நோவுண்டாகும் என்பதை அறிந்திருக்கிறதால் மிகவும் பயப்படுவாராம். ஆனால், அவர் சொன்னது, என் இயேசு எல்லாவற்றையும் அறிந்துகொண்டுதானே இவ்வுலகத்திற்கு வந்தார், ஊழியம் செய்தார். சிலுவையில் வேதனை தெரிந்துதானே அவர் சிலுவைப் பாடுகளுக்குத் தம்மை உட்படுத்தினார். அப்படிப்பட்ட என் தேவன் என்னைத் தாங்குவார் என்று நினைத்தவுடன் ஒரு பெரிய ஆறுதல் ஒருவித சுகம் என்னை மூடிக்கொள்ளும் என்றார்.

ஆம், அறிந்துகொண்டு தெரிந்துகொண்டு இவ்வுலகில் வந்துதித்த கிறிஸ்துவைக் கொண்டாடுவதை மறந்து கிறிஸ்மஸ் கொண்டாடவேண்டாம். விசேஷமாக இந்த கிறிஸ்மஸ் நாட்களில் நம் நடைகளை உடைகளை மனஎண்ணங்கள் விருப்பங்களை, நம் செயற்பாடுகளை கிறிஸ்மஸ் நாயகனாகிய கிறிஸ்துவுக்குள் காத்துக்கொள்ள தவறாதிருப்போமாக. அது கடினம் தான். ஆனால் சகலத்தையும் அறிந்துகொண்டு மானிடனாய் வந்துதிக்க பின்வாங்காத ஆண்டவர் நிச்சயம் உங்கள் அனைவரையும் புதிய பெலத்தாலும் தைரியத்தாலும் நிரப்புவார்.

சத்திய வசன வாசகர்கள் அனைவருக்கும் என் அன்பான கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்! ❑




BACK TO THE BIBLE சத்தியவசனம்

**Back To The Bible புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்......**

சிங்கள தமிழ் ஆங்கில **வேத வசன கலண்டர்** ஒன்றின் விலை ரூபாய் 100/=

அழகிய வர்ண **கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள்** ஒன்றின் விலை ரூபாய் 15/=

இப்பொழுது எமது புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.....

**Back to the Bible Bookshop**
120 A, தர்மபால மாவத்தை
கொழும்பு 07
தொலைபேசி: 011 2687040














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- Dr. புஷ்பராஜ் -

# கிறிஸ்தவரல்லாத ஞானி கண்ட கிறிஸ்து

"மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்" (லூக்.9:56). இந்த உலகத்திலே நீங்கள் எத்தனையோ அவதாரங்கள் வந்துபோனதாக பல புத்தகங்களிலே வாசிக்கலாம். பல வேதங்களிலும் நீங்கள் வாசிக்க லாம். ஆனால் வந்த அவதாரங்களோ, மனுஷருடைய பாவங்களிலிருந்து அவர்களை இரட்சிப்பதற்காக அல்லவே அல்ல. மனுஷனுடைய பாவத்திலிருந்து விமோசனம் கொடுப்பதற்காகவும் அல்லவே அல்ல.

சமஸ்கிருத சுலோகத்திலே ஒரு வசனமுண்டு. "துஷ்ட நிக்கிரகம், சிஷ்ட பரிபாலனம்" இதனுடைய அர்த்தம் என்ன? துஷ்டர்களை அல்லது பாவிகளை அழித்து நல்லவர்களை காப்பாற்றுவதற்காகவே எல்லா அவதாரங்களும் வந்ததாக எழுதப்பட்டிருக்கின்றது. அதாவது பாவிகளை அழிப்பதற்காக. பாவிகளை காப் பாற்றுவதற்காக ஒரு அவதாரமும் வந்ததாக எழுதப்பட வில்லை. ஆனால் கிறிஸ்தவ வேதம் சொல்கிறது, பாவிகளை இரட்சிக்கிறதற்காகவே கிறிஸ்தேசு உலகத் துக்கு வந்தார் என்று. பாவம் செய்தவனுடைய வாழ்க் கையை சரிப்படுத்தி, மன்னித்து, பாவங்களைக் கழுவி, பரலோகத்திலே அவர்களும் வந்து, சந்தோஷமாய் வாழவேண்டும் என்பதுதான் தெய்வத்தினுடைய சித்தம்.

ஒருவனாகிலும் நரகத்துக்குள் போகவேண்டு மென்றோ அவர்கள் வேதனை அனுபவிக்கவேண்டு மென்றோ, தெய்வம் விரும்புகிறவர் அல்ல. எனவே இப்படிப்பட்ட ஒரு அவதாரம் எடுத்து பாவம் நிறைந்த மக்களை காப்பாற்றவேண்டும் என்பது தெய்வத்தினு டைய அநாதி தீர்மானமும் திட்டமுமாயிருந்தது.

மனுஷர்கள் எல்லோருமே பாவிகளாயிருக்கி றார்கள். உலகமெல்லாம் பாவத்துக்குள்ளாக நிரம்பி கிடக்கின்றது. பாவத்தில் மூழ்கி கிடக்கிற இந்த உலக மக்களுக்கு பாவத்திலிருந்து விமோசனம்கொடுப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அந்த வழி என்ன?

ருக் வேதமும் சாம வேதமும் இவ்விதமாகச் சொல்கிறது. விஷ்வ கருமா எனப்பட்ட பிரஜாபதியாகிய புருஷன் தன்னையே பலியாக்கி, இரத்தம்சிந்தி, நம்மை மீட்டுக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் மனுஷரு டைய பாவத்திலிருந்து விமோசனம் உண்டு. எனவே விஷ்வகருமா எனப்பட்ட பிரஜாபதி, இந்த உலகத்துக் குள் வந்து தன்னை பலிசெலுத்தவேண்டும். ஆகவே அந்த பிரஜாபதி யார்? அவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும்? அப் பிரஜாபதி இந்த உலகத்திற்குள் வந்து விட்டாரா? இந்தக் கேள்விக்கான சரியான பதிலை, நீங்கள் கிறிஸ்தவ வேத புத்தகத்திலே பார்க்கலாம். அந்த பிரஜாபதியினுடைய குணங்களைக் குறித்து அகஸ்திய ஞானம் 30ம் அதிகாரம் 23ம் பாட்டு இப்படி யாகச் சொல்கிறது. அந்த முனிவர் எவ்வளவு அழகாக எழுதியுள்ளார் என்பதை நீங்களே வாசித்து பாருங்கள்.

வணங்குவாய் ஜெகஜோதி ஒருவனாகி,
மானிடத்தை ஒரு நொடியில் வகுத்தே மண்ணில்,
குணமான மனிதனையும் படைத்த பின்,
குவலயத்தில் தானுதித்து, உருவாய் வந்து,
கனமான சமுசாரம் ஒன்றில்லாமல்,
சந்யாசி போலிருந்து தவத்தைக் காட்டி,
அன்பான சித்தர்களை இருத்திப் போட்டு
அகண்ட தளம் சென்றவரை அண்டுவாயே!

ஒரு கிறிஸ்தவரல்லாத ஞானியாகிய இவர், என்ன எழுதியிருக்கிறார்? இப்படிப்பட்ட உயரிய இலட்ச ணங்களையுடைய பிராஜாபதி இந்த உலகத்திற்குள் வந்திருக்கிறார். அவ்விதம் வந்துபோன அவரை நீ அண்டிக்கொண்டால் மாத்திரமே, உனக்கு சமாதானம் என்று சொல்லி எழுதியிருக்கிறார்.

இந்த குணங்களையுடையவர் யார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இந்த பாட்டின் கருத்து என்ன? முழு உலகத்தைப் படைத்த தெய்வம், மனுஷரையும் படைத்து, பின் அந்த மனுஷர்களின் மத்தியிலே, ஒரு மனுஷனாகப் பிறந்து, மனைவிகள் என்று யாருமே இல்லாமல், சந்நியாசி போல வாழ்ந்து, கல்யாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாமல் ஜீவித்து, தனக்குச் சீஷர்களை ஏற்படுத்தி, அவர்களிடம், தான் வந்த விபரத்தை உலகமெங்கும் அறிவிக்கும்படியாய் சொல்லிவிட்டு, அவர்களை இந்த உலகத்தில் இருத்தி விட்டு அவர் மரித்து, மேலுலகம் சென்றிருக்கிறார். அப்படிப்பட்டவரை, சேவிக்கும்படியாக, இந்த முனிவர் கூறியிருக்கிறார். உண்மைதான். இவர் யாரைக் குறித்து கூறியிருக்கிறார்?

எவ்விதமான பாவமும் இல்லாதபடி, பரிசுத்தமாக வாழ்ந்து, தன்னுடைய சரீரத்தை அடிப்பதற்கு ஒப்புக்கொடுத்து, எல்லா இரத்தத்தையும் சிந்தி, மரித்து, உயிரோடு எழும்பின ஒரே தெய்வம் இயேசு ஒருவரைத் தவிர வேறு எவருமே இப்பாரினில் கிடையாது. எனவே ஞானி குறிப்பிட்டுள்ள இந்த பாட்டுக்கு ஒப்பாக, இயேசு கிறிஸ்துவின் அவதாரம் பொருந்துகிறதை நீங்கள் பார்க்கலாம்.

பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு இவ் உலகத்துக்குள் வந்தார் என்று எழுதப்பட்டுள்ளது. நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவனாயிருந்தாலும் சரி, எந்த மொழி பேசுகிறவனாயிருந்தாலும் சரி, எந்த மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் சரி, இந்த உலகத்திலுள்ள எல்லாருடைய பாவங்களையும் மன்னிப்பதற்காகவே பாவத்தைக் கழுவுவதற்காகவே இயேசு இவ்வுலகில் அவதரித்தார். அவர் பிறப்பதற்கு முன்பதாகவே தீர்க்க தரிசிகள் சொல்லி வைத்துப்போன சில காரியங்களைக் கவனியுங்கள்.

ஏசாயா எனும் தீர்க்கதரிசியின் மூலமாக வேத புத்தகத்தில் இவ்விதமாக ஆண்டவர் கூறியிருக்கிறார். "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப் பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களி னிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங் களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (ஏசாயா 53:4-6) என்று பார்க்கிறோம்.

நம்முடைய பாவங்களுக்காக அவர்தாமே அடிக்கப்பட்டார். நாம் செய்த துரோகங்களுக்காக, நாம் செய்த மீறுதல்களுக்காகவே அவர் வேதனைப் பட்டார். இப்படி நமக்காகவே அடிக்கபட்ட தேவகுமாரன் இயேசு கிறிஸ்துவை உங்களுக்கு அறிமுகப்படுத்தவே, இங்கு நான் இந்த செய்தியைத் தருகிறேன்.

இந்த இயேசுவைக் குறித்து, இன்னும் ஒரு கிறிஸ்தவனல்லாத பக்தன் ஒருவர் குறிப்பிட்டுள்ளதை பாருங்கள். பட்டிணத்தார் என்பது அவருடைய பெயர்.

"கல்லதை வெள்ளியை செம்பை
களிமண்ணால் மிதியிட்டு உருவின குயவன்,
கட்டிய கோலமும் கருதேன் - வல்லிரும்
புக்கால் வெள்ளி தகட்டால், மற்றலி
பஞ்ச லோகத்தால், வார்த்து அடித்து
வைத்ததுமான, வஞ்சிலைகளையும் மதியேன்.
செல்லரிக்காத மரத்தினைத் தெரிந்து,
சித்திர வேலைகள் சிறந்த பொம்மைகள்
பற்பல படங்கள், செய்து சித்தையிற்
கனவிலும் மதியேன். எல்லை வாழ்
எனக்கினி ஆகாது, உமக்கு நான் அடிமை
யெந்தன் இயேசு நாயகனே"

என்று பாடி முடிக்கிறார். ஆம், அருமையானவர்களே, உண்மையான தெய்வத்தை எப்படியோ இவர் தெரிந்து அறிந்து கொண்டிருக்கிறார். உண்மையாய் அடிக்கப்பட்ட இயேசு கிறிஸ்து யார் என்பதை அவர் அறிந்திருக்காவிட்டாலும் அவர் எப்படிப்பட்டவராக இருப்பார் என்பதை நன்கு புரிந்துவைத்திருக்கின்றார். நீ என்ன சொல்லப்போகின்றாய்? இப்படி நான் சொல்லுகிறதினாலே, இவர்கள் கிறிஸ்தவ மதப்பிரசாரம் செய்கிறார்கள் என்று நீ கருதிவிடக்கூடாது. நான் கிறிஸ்தவ மதத்தைச் சேரும்படியாய் இதை ஒருபோதும் சொல்ல மாட்டேன். இதைக்கேட்டு யாருமே கிறிஸ்தவ ஜாதியில் சேரவும் வேண்டாம்.

உண்மையில், கிறிஸ்தவ மதமென்றும் ஒன்றுமில்லை. கிறிஸ்தவ ஜாதி என்றும் ஒன்றுமில்லை. இயேசு எந்த மதத்தையும் ஸ்தாபிக்க வரவில்லை. அவர் எம் மதத்திற்கும் தலைவருமல்ல. அவர் தெய்வ குமாரன். தன்னை வெளிப்படுத்தி காண்பிக்கவே அவர் இவ்வுலகிற்குள் வந்தார். ஆகவே நீ கிறிஸ்தவ ஜாதியில் சேர்வதனால் மோட்சமில்லை. கிறிஸ்தவ பெயராக மாற்றி வைத்துக்கொண்டாலும் உனக்குப் பரலோகம் கிடையாது. ஆனால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரை குலதெய்வமாக ஏற்றுக்கொண்டு உன்னுடைய வாழ்வில் அவரையே சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு நடப்பாயே என்று சொன்னால், அப்போது மட்டுமே உனக்கு பரலோக பாக்கியம் கிடைக்கும்.

ஆகவே அருமையானவர்களே, இந்த இயேசு கிறிஸ்துவை உங்களது சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொள்வீர்களா? அப்போது உங்களுக்கு சந்தோஷம் சமாதானம் நிச்சயமாய் கிடைக்கும்.

யோவான் 1:12 ல், "அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண் டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" எனவும், மாற்கு 10:15 ல், "எவனாகிலும் சிறுபிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றும் எழுதப்பட்டுள்ளது. எனவே நீ இயேசுவை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே தேவனுடைய பிள்ளையாக மாறமுடியும். அப்போது அவர் உன்னை ஆசீர்வதிப்பார். ❑

(1986 சத்தியவசனம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை இயேசு மன்னன் கிறிஸ்துவா?



- ஆ. பிரேம்குமார் -

**கலியாணமாகாமலே கன்னி கர்ப்பமா?** (லூக் 1:26-38)

கலியாணமாகாமலே ஒரு கன்னிப்பெண் கர்ப்பமாவது எவ்வளவு அவமானத்திற்குரியது. அதுவும் திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்ட பெண் யாருக்கென நிச்சயிக்கப்பட்டாலோ அவர் காரணமின்றி இவள் கர்ப்ப மடைந்தாளா? குடும்பத்தார் என்ன நினைப்பார்கள்? அவளின் உற்றார் உறவினர்கள் அயலவர்கள் என்ன பேசுவார்கள்?

தேவதூதன் கன்னி மரியாளிடம் வந்து, உலக இரட்சகரை நீ கர்ப்பந்தரிக்கப் போகின்றாய் என அறிவித்தபோது தான் கன்னி என்பதால், “இது எப்படி ஆகும்?” என்று கேட்டாள் மரியாள். “பரிசுத்தஆவியினால் ஆகும்” என்று தூதன் உரைத்தபோது, “கன்னியான நான் கர்ப்பந்தரித்தால் எனக்கு நிச்சயிக்கப்பட்டவர் என்னைக் கைவிட்டு விடுவாரே! என் எதிர்காலம் இருண்டுவிடுமே! என் பெற்றோர் உற்றார் உறவினர் அயலகத்தார் என்ன நினைப்பார்கள்! திருமணமாகாமல் கர்ப்பந்தரித்தால் கல்லெறிந்துகூட கொலைசெய்யப்படலாமே?” என்றெல்லாம் அவள் கலங்கவில்லை. அது அவமானத்திற்குரியதாகவும், தேவனுக்குரியதாகவும் இருந்தால் கர்த்தரின் சித்தப்படியே ஆகக்கடவது என்று தன்னை தேவ சித்தத்திற்குள்ளாக அடிமையாக ஒப்புக்கொடுத்து தேவனை மகிமைப்படுத்தினாள் மரியாள்.

தேவ அழைப்பு என்பது ஒரு புறத்தில் பெரிதானதொரு பாக்கியம். உலக இரட்சகரை, தேவ குமாரனை, தன் கருவறையில் சுமக்கும் பாக்கியம் மறுபுறம் அது பாடுகள் நிறைந்தது. அவமானம், புறக்கணிப்பு, தவறாக புரிந்துகொள்ளப்படுதல், (ஆவியினால் கர்ப்பமடைந்தார் என்பதை எத்தனைப்பேர் நம்புவார்கள்?) அதுமாத்திரமல்ல, சிமியோன் தீர்க்கதரிசி, “ஒரு பட்டயம் உன் ஆத்துமாவை உடுருவிச்செல்லும்” எனக் கூறியதுபோல (லூக்கா 2:35) தனது மகன் படுகோரமாக கொலைசெய்யப்படுவதை கண்ணால் காணும் வேதனை, இத்தனையும் மரியாளைப் பொறுத்தவரை கிறிஸ்துவின் பிறப்பு பாக்கியத்தையும், பாடுகளையும் உள்ளடக்கியதாயிருந்தது. இதற்கு மரியாளின் மாறுத்தரம், தன் கனவுகள் கலைந்துபோனாலும் தேவசித்தத்திற்கு தன்னை சிறைப்படுத்தி தேவனை மகிமைப்படுத்துவதாகவே இருந்தது.

மரியாளும் திருமணத்தை கனவுகளோடு எதிர்பார்த்திருந்த இளம் பெண் தான், தான் கட்டிய கனவுக் கோட்டைகள் களைவதைக் குறித்து அவள் கவலை கொள்ளவில்லை. தான் நடத்தை கெட்டவள் என்று மற்றவரால் செய்யாத குற்றத்திற்கு அவமானப் படுவதற்கும் ஏன் மரிப்பதற்கும் கூட தயங்கவில்லை இதனை வாசிக்கும் சகோதரனே சகோதரியே, ஆண்டவரின் சித்தம்செய்ய உங்கள் இலட்சியங்களை பலிபீடத்தில் படைக்க நீங்கள் ஆயத்தமா? ஆண்டவருக்காக சிலுவை சுமக்க பாடுகள் அனுபவிக்க இழப்புகளை சந்திக்க நீங்கள் ஆயத்தமா? அல்லது ஆண்டவரின் சித்தத்தை விட மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதில் நீங்கள் அவதானமாயிருக்கிறீர்களா?

**தனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் தன்னாலன்றி கர்ப்பமா** (மத்தேயு 1:18-25)

பெண்பார்த்து நிச்சயமும் பண்ணிவிட்டாகிவிட்டது. இன்றைய நிச்சயார்த்தத்தைப் போலல்லாது, நியமிக்கப்பட்ட காலத்தில் கூடி வாழமுடியாது. ஆனால் அன்றைய நிச்சயார்த்தங்களை விவாகரத்து மூலமே இரத்துசெய்ய முடியும். தனக்கு நியமிக்கப்பட்ட பெண் கன்னியாயிருக்க வேண்டும் என்பது ஒவ்வொரு புது மாப்பிள்ளையினதும் எதிர்பார்ப்பு. ஆனால் தனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் எப்படியோ கர்ப்பம் தரித்துள்ளாள் என்று அறிந்தபோது யோசேப்பின் மனதில் ஒரு வளைகுடா யுத்தமே மூண்டிருக்கும். அவள் என்னை ஏமாற்றிவிட்டாள். எனவே நான் அவளை அவமானப் படுத்தி பழிதீர்க்கப்போகிறேன். இதனை ஊருக்கெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் அறிவித்து கல்லால் எறிந்து சட்டப்படி, கொலை செய்ய வைப்பேன் என்று யோசேப்பு எண்ணவில்லை. அவர் நீதிமானாக இருந்ததால், மற்றவர்கள் முன்னிலையில் மரியாளை அவமானப்படுத்தாமல், இரகசியமாக தள்ளிவிட எண்ணினார். மரியாள் தேவ ஆவியால், உலக இரட்சகரை கர்ப்பந்தரித்துள்ள உண்மையை அறிந்தபோது தனதல்லாத குழந்தைக்கு தகப்பனாகுமளவிற்கு, தன்னை தேவசித்தத்திற்கு அர்ப் பணித்து கீழ்ப்படிந்தார். குழந்தை இயேசுவை போஷித்து, தச்சனாக பயிற்றுவித்ததும் இவர்தான். இயேசுவின் பிறப்புக்கு யோசேப்பின் மாறுத்தரமானது, ஆண்டவருக்காக ஒரு தேவ மகனை வளர்த்தெடுக்கும் பொறுப்பினை கீழ்ப்படிதலுடன் நிறைவேற்றுவதாக இருந்தது.

**முக்கியமில்லாத மேய்ப்பருக்கு முதல் செய்தியா**
(லூக்கா 2:8-20)

அன்றைய சமுதாயத்தில், மேய்ப்பர்கள் சிறந்த வைதீகவாதிகளால் அற்பமாக எண்ணப்பட்டனர். தங்கள் கைகளைக் கழுவுதல் மற்றும் சட்டதிட்டங்கள் அடங்கிய சம்பிரதாயங்களை நுணுக்கமாக அவர்களால் கடைபிடிக்க முடியாதிருந்தனர். எனவே வைதீகவாதிகள் அவர்களை மிகவும் சாதாரண மனிதர்களாக கீழானவர்களாக நோக்கினார்கள்.

வேதப் போதகர்களுக்கோ மதவாதிகளுக்கோ அல்ல, இவர்களால் கீழானவர்களாக மத ரீதியாக புறக்கணிக்கப்பட்டவர்களாக கருதப்பட்ட இடையர்க ளுக்கே இறைமகன் பிறந்த இறைசெய்தி முதல் முதலாக அறிவிக்கப்பட்டது. ஒருவிதத்தில், இந்த மேய்ப்பர்கள் மிகச் சிறப்பானவர்கள். ஏனென்றால், இவர்கள் தேவாலயத்தில் காலையிலும் மாலையிலும் பலிகொடுக்க பயன்படும் பழுதற்ற மந்தைகளை மேய்க்கும் பொறுப்பில் இருந்தனர். இந்த மந்தைகள் பெத்லகேமிற்கு அருகிலுள்ள வெளியில் மேய்க்கப் பட்டன. "தேவாலய ஆட்டுக்குட்டிகளைப் (பலிகொடுக் கும்படி) பராமரிக்கும் இந்த மேய்ப்பர்களே உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை (யோவான் 1:29) முதலில் பார்த்தனர்" என்பது எவ்வளவு ஆச்சரியமான சிந்தனை.

வில்லியம் பார்க்ளே என்கிற வேத விற்பன்னர் எமக்கு அறியத் தருகின்றபடி, "பலஸ்தீனாவில் பிள்ளை பிறப்பு நெருங்கும்போது நண்பர்களும் உள்ளூர் வாத்தி யக் கலைஞரும் வீட்டினருகே வரவழைக்கப்படுவார் கள். பிள்ளையின் பிறப்பு அறிவிக்கப்படும்போது, ஆண் பிள்ளையாக இருந்தால் வாத்தியக் கலைஞர்கள் இசை முழக்கமிட்டு பாடல்களைப் பாடுவார்கள். முழு உலகமே களிகூருமளவிலான சந்தோஷ வாழ்த்துத லாக அது இருக்கும். ஆனால் பிறந்தது பெண்பிள்ளை யாக இருந்தால் வாத்தியக் கலைஞர்கள் மனவருத்த தோடு அமைதியாக திரும்பி விடுவார்கள்." இயேசு மாட்டுக்கொட்டிலில் பிறந்ததால், இந்த வைபவம் இடம் பெற வாய்ப்பில்லை. ஆனால் மன்னவரின் ஊழியத்தை விண்ணவர்கள் செய்தனர். வாத்தியக் கலைஞர்களின் இடத்தில் தேவதூதர்கள் இயேசுவுக்காகப் பாடல் களைப் பாடினார்கள்.

மேய்ப்பர்களின் பிரதியுத்தரமானது, இயேசுவை நேரடியாகக் கண்டு, தேவனை மகிமைப்படுத்தி துதித்த துடன் (லூக்கா 2:20) எல்லா ஜனத்திற்கும் (சகல தேசத்து மக்களுக்கும்) மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை பிரசித்தம் பண்ணுவதாக இருந்தது (லூக்கா 2:17). இந்த நத்தார் நாட்களில் கிறிஸ்துவிடம் நெருங்கி வந்து தேவன் தமது குமாரனை எமக்காக மரிக்கும்படி அனுப்பியதற்காக தேவனைத் துதித்து மகிமைப்படுத்தி அவரை மற்றவர்களுக்கும் அறிவிப்போமா?

**அந்நிய சாஸ்திரிகள் அரசனைத் தேடியதேன்**
(மத்தேயு 2:1-12)

பெர்சியாவைச் சேர்ந்த ஆசாரிய கோத்திரம் "மெஜய்" என்று அழைக்கப்பட்டு வந்தது. இந்த வான சாஸ்திரிகள் ஒரு விசித்திரமான நட்சத்திரத்தைக் கண்டு பிரயாண பாடுகளை எண்ணாமல் அதிக தூரம் அந்த நட்சத்திரத்தைத் தொடர்ந்து வந்தனர். இவர்கள் புற ஜாதிகளாக இருந்தும் யூதருக்கு ராஜாவாக பிறந்திருப் பவரைக் காண பல மைல் தூரம் வந்திருந்தனர். இவர்கள், ராஜா அரண்மனையில் பிறந்திருப்பார் என்ற எண்ணத்தில் அரண்மனைக்குப்போய் ஏரோது ராஜாவை சந்திக்கின்றனர். பிறந்துள்ள ராஜாவுக்கு ஏரோதின் மாறுத்தரமானது, கலக்கமும் பயமும் எதிர்ப்புமாக இருந்தது. ஏரோது இவரை தன் பதவிக்கு அச்சுறுத்தலாகக் கருதி அழிக்க சதி தீட்டுகிறார். ஆகவே பிரதான ஆசாரியர் வேதபாரகர் ஆகிய மதத் தலைவர்களை அழைப்பித்து கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பார் என்று கேட்டபோது, அவர்கள் மீகா 5:2ஐ வைத்து "அவர் பெத்லகேமில் பிறப்பார்" என்று அறிவித்தார்கள். ஆனால், கிறிஸ்துவை தூரதேசத்து அந்நிய சாஸ்திரிகள் தேடிவர, அங்குள்ள மதத் தலைவர்களோ வெறும் தலையறிவில் மாத்திரம் அவரை அறிந்து, அதைக்குறித்து அசதியாக இருந்து விட்டனர். அந்நியரான சாஸ்திரிகள் முழு மனதோடு ராஜாவைத் தேடினார்கள். யூத மதத் தலைவர்களோ தமக்கு அருகில் பிறந்துவிட்ட மேசியாவைக் குறித்து அலட்சியமாக இருந்தனர்.

ஏரோதின் இராஜ்யத்திற்கும் கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குமிடையே பெரிய வித்தியாசமிருந்தது. அவன் அநீதி இழைத்து, தனது சுயநலத்திற்காக அதிகாரத்தை துர்ப்பிரயோகம் செய்து பலவந்தத்தை பயன்படுத்தி உயிர்களைக் கொன்று நிலையற்ற இராஜ்யத்தையே ஆட்சிசெய்தான். கிறிஸ்துவோ மக்க ளுக்காக தன்னையே பலியாகக் கொடுத்து அன்பின் இராஜ்ஜியத்தை அழிவில்லாத இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரிகள் நட்சத்திரத்தை திரும்வும் கண்டு மிகுந்த சந்தோஷமடைந்து அதை தொடர்ந்து சென்று, கிறிஸ்து தங்கியிருந்த வீட்டின்மேல் நட்சத்திரம் நிற்கக் கண்டு உள்ளே சென்றனர். மேய்ப்பர்கள் குழந்தையைக் காணச் சென்றபோது குழந்தை மாட்டுத் தொழுவத்திலிருந்தது. (இப்பொழுதோ சிறிது காலம்கடந்து அவர்களுக்கொரு வீடும் கிடைத்துவிட்டது). அரண்மனையில் தேடிய அரசனை சாதாரண வீடொன்றில் கண்டு சாஸ்டாங்கமாக விழுந்து பிள்ளையைப்பணிந்து கொண்டனர். அதாவது மூன்று விலையேறப்பெற்ற பரிசுகளைக் கொடுத்து தொழுதுகொண்டனர்.

பொன் ராஜாக்களுக்குக் கொடுக்கும் ஒரு பரிசாகும். தூபவர்க்கமானது ஆசாரியர்களுக்கு கொடுக்கப்படுவது. அதை அவர்கள் ஆண்டவருக்காகப் பயன்படுத்துவார்கள். மனிதகுலத்தை தேவனோடு ஒப்புரவாக்கும் இறுதியான பிரதான ஆசாரியர் கிறிஸ்துவேயாகும். வெள்ளைப்போளம் மரித்த ஒருவருக்கு பயன்படுத்துவதாகும். “இராஜாவாகப் பிறந்த மனிதன் மரிக்கப் பிறந்த மனிதனாவார்.” சாஸ்திரிகள் சிரமம் பாராது முழு இருதயத்தோடு ராஜாவைத்தேடி பணிந்து கொண்டு கொடைகளைக் கொடுத்ததுபோல நாமும் எம் முழு இருதயத்தோடும் கிறிஸ்துவைத்தேடி அவரை இராஜாவாகப் பணிந்து, எம்மை அவர் ஆளுகைக்குக் கீழ்ப்படுத்தி எமக்குரியவற்றால் அவரை மகிமைப்படுத்துவோமா?

மேசியா பெத்லகேமில் (மீகா 5 இலுள்ள தீர்க்கதரிசனப்படி) பிறக்கவேண்டுமென பல ஆண்டுகள் முன்னதாகவே தேவன் முன்குறித்து விட்டார். நேரம் வந்தபோது எல்லாக் காரியங்களையும் அதற்கேற்றவிதமாக நியமித்து, நாசரேத்தில் வாழ்ந்த மேசியாவின் தாயாரும் சட்டரீதியான தகப்பனும் தனது வார்த்தையை நிறைவேற்றும்படி மேசியா பெத்லகேமில் பிறக்கும்படி இந்த சிறியவர் இருவரையும் முதல் கிறிஸ்மஸ்க்கு பெத்லகேம் கொண்டுவரும்படி ரோம உலக முழுவது முள்ளவர்கள் தங்கள் தங்கள் ஊர்களுக்குப்போகும்படி தேவன் அகஸ்துராயனுடைய இருதயத்தில் போட்டதும் ஆச்சரியமாயிருப்பதை சிந்தித்து பார்த்ததுண்டா? என ஜோன் பைபர் என்ற தேவ ஊழியர் கேட்கிறார். இது இன்னமும் தேவன் ராஜரீகம்பண்ணுகிறார் என்பதை தெளிவாக்குகிறது.

தேவதூதன் மரியாளுக்கு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து அறிவிக்கையில், “அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார் அவரது இராஜ்ஜியத்திற்கு முடிவிராது” என்றார் (லூக் 1:33). தேவதூதன் மேய்ப்பருக்கு செய்தி அறிவிக்கையில், “இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்” (லூக்.2:11) என அறிவித்தார். கிறிஸ்து என்றால் ராஜா என்று அர்த்தம். அவர் தாவீதின் ஊரிலே பிறந்துள்ளார் என்று அறிவித்தனர். சாஸ்திரிகளும் யூதருக்கு இராஜாவாகப் பிறந்தவரைத் தேடி வந்ததுடன் இராஜாவுக்குரிய பரிசாகிய பொன்னையும் கொண்டு வந்தனர்.

இதனை வாசிக்கும் சகோதரனே சகோதரியே, இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா? அவரை இரட்சகராக மட்டும் ஏற்றுக்கொண்டால் போதாது. அவரை ஆண்டவராக, வாழ்க்கையின் ராஜாவாக ஏற்று, உங்கள் வாழ்க்கையின் ஆளுகையை அவர் கரங்களில் கொடுத்துள்ளீர்களா? இந்த நத்தார் நாட்களில் கிறிஸ்துவை குழந்தையாகவல்ல, ஒரு ராஜாவாக நோக்குவோமா? எமக்காக மரிக்கப் பிறந்த மன்னவனை நன்றியோடு துதித்து ஸ்தோத்திரித்து அவரை தொழுதுகொண்டு அவர் சித்தம் எம் வாழ்வில் நிறைவேற எம்மை முழுவதுமாக இராஜாவின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுப்போமா! ❑


சத்தியவசன புதிய வெளியீடு...

**சிதைவுண்டதைச் செதுக்குதல்**




“இன்று விழுந்துபோகிற விசுவாசிகளினதும் தவறிப்போகிற தலைவர்களினதும் எண்ணிக்கை அதிவேகமாக அதிகரித்துக்கொண்டு வருகின்றது. விழுந்து போனவனைத் தூக்கி நிலைநிறுத்த செம்மையானதொரு செயல்திட்டத்தையோ அல்லது மீளக்கட்டியெழுப்பும் படிமுறையையோ சபைகள் பலவற்றில் காண்பதற்கு அரிதாயிருப்பது கவலைக்குரிய விடயம்.” இவற்றைக் குறித்த செய்திகளை சகோதரன் ஆ. பிரேம்குமார் அவர்கள் விரிவாக அலசி ஆராய்ந்து ஒரு நூலாக தொகுத்து தந்துள்ளார்.

**சத்தியவசன புத்தகச்சாலையில் விரைவில் பெற்றுக்கொள்ளலாம்.**

**Back to the Bible Bookshop**

**120 A, தர்மபால மாவத்தை, கொழும்பு 7.**

தொலைபேசி இல : 011-2687040, 011-2695441





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனை அறிந்துகொள்ளல்!



- சகோ. சுபாஷ் சுந்தரலிங்கம் -

"தேவன் எம்மீது அன்பாக இருக்கின்றார்" என்பதை யோவான் 3:16 தெளிவுபடுத்துகின்றது. "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." தேவன் நம்மில் அன்புகூர்ந்தார் என்பது தெளிவாகின்றது. தேவனின் நோக்கம் நமது வாழ்வு நித்திய வாழ்வாகவே விளங்க வேண்டும் என்பதனையே மேலும் தெளிவுபடுத்துகிறது. "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்." (யோவான் 17:3) என்ற வார்த்தையின்படி, நித்திய ஜீவனானது அவருடனான உறவை வலியுறுத்துகின்றது. இந்த உறவின் பிரதிபலனாக நாம் தேவனை மகிமைப்படுத்துகின்றோம்.

"அறிந்துகொள்ளல்" என அர்த்தம்கொள்ளும் கிரேக்க மொழிப்பதம் "ஜினொஸ்கோ" என்பது புதிதாக அறிந்துகொள்ளல், தெரிந்துகொள்ளல், முழுமையான விளக்கத்தைப் பெற முயற்சி செய்தல், பூரணமான அறிவை பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்களைக் குறிப்பதாகும். எபிரெய பதமாகிய "யடா" என்பது தேவன் அவரை நெருங்கிய உறவாக அரவணைத்துக் கொள்ளும் அதேவேளையில் நெருங்கிய நண்பராக, என் ஆத்துமாவை நேசிப்பவராக, என் வாழ்கையின் அறிவு நிறைந்தவராக, போஷிப்பவராக, பாதுகாப்பவராக இருக்கிறார் என்பதனைக் குறிக்கும். தேவனைப் பற்றிய இந்த வெளிப்படுத்தப்பட்ட அன்பு மனதாலறியும் அறிவிலும் சற்று வித்தியாசமானது. இவ்வகையான இடைப்பாடும் தேவனுடனான தனிப்பட்ட உறவும் கொண்ட ஒருவரே நித்திய வாழ்வை அனுபவிக்க ஏதுவானவர் என்ற முடிவுக்கு நாம் வரமுடியும். தேவனை அறிந்து கொள்வதனால் வளம் நிறைந்த வாழ்வை அனுபவிக்க முடியும். ஏனெனில் தேவன் அன்பாக இருப்பதுடன் ஆழமான அன்புடன் நேசிக்கின்றார். தமது ஒரேபேறான குமாரனை கல்வாரி சிலுவையில் அறையப்பட ஒப்புக்கொடுத்து தமது அன்பை வெளிப்படுத்திய அவரே நமக்கு இரட்சிப்பைத் தந்தார். ஆகவே நாம் அவரையும் அவருடைய குமாரனின் அன்பையும் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

இரட்சிப்படைவதற்கு முன்னர் நாம் பாவிகளாக இருந்தோம். பெருமையுள்ளவர்களாக, பயமுள்ளவர்களாக சாத்தானின் அடிமைத்தனத்திற்குள் கீழ்ப்பட்டவர்களாக, மரணத்தை நோக்கிச் செல்பவர்களாக வாழ்ந்து கொண்டிருந்தோம். மாமிசம், உலகம், மரணத்திற்குரிய அதிபதியான பிசாசு போன்றவற்றிக்கு அடிமைப்பட்டு உண்மையில் விடுதலையற்றவர்களாக இருந்தோம். மெய் சத்தியத்தை அறிந்த பின்னரே சத்தியம் நம்மை விடுதலையாக்கிற்று. இயேசுவே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் நம்மை விடுதலையாக்கி எங்கள் தனிப்பட்ட தேவையைச் சந்தித்தார். இந்த விடுதலையானது நித்திய ஜீவனுக்குள்ளாக வருகின்றது. நித்திய ஜீவனானது தேவனையும் அவருடைய குமாரனாகிய இயேசுவையும் அறிந்துகொள்வதினால் ஏற்படுகின்றது. எமது பாவமானது தண்டனைக்குரியது. தேவன் பரிசுத்தரான படியால் நமது பாவத்திற்கு நாமே தண்டிக்கப்படவேண்டியதாயிருந்தது. எனினும் தேவன் அன்புள்ளவராக இருப்பதினால், அவர் தம்முடைய குமானாகிய இயேசு மனிதனாக பிறந்து, பரிசுத்தமாக வாழ்ந்து, தேவனுடைய பிரமாணங்களை நிறைவேற்றி, தேவனுடைய நீதியை நிலைநாட்டி, மனிதனின் பாவத்திற்குரிய கிரயத்தைச் செலுத்தி, தேவனுடைய ஆட்டுக்குட்டியாக கல்வாரி சிலுவையில் அறையப்படட்டு, மனிதனின் பாவத்தினால் ஏற்பட்ட கிரயத்தை நிறைவேற்றி முடிக்க அனுமதியளித்தார். அவ்வாறாக நிறைவேற்றிய இயேசுவை தேவன் உயிர்த்தெழச் செய்தார்.

இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததும் தேவன் தம்முடைய வலது பாரிசத்திலே அமரச் செய்து அனைத்தையும் அவருடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினார். அவருடைய குமாரனாகிய கிறிஸ்து மாம்சம், உலகம், மரணம் தழுவிய பிசாசை வெற்றி சிறந்ததினால் சிலுவையில் வெற்றிகொண்டமையால், நித்திய ஜீவனுக்குரிய இரட்சிப்பு என்னும் கொடையை தேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு கொடுத்தார். அதன் விளைவாக நித்திய ஜீவனையும் எதிர்காலத்தில் தேவனுடன் பரலோகத்தில் வாசம் செய்கின்ற நம்பிக்கையையும் நாம் பெற்றுக் கொண்டோம்.

நாம் செய்யவேண்டியது ஒன்றே. நமது பாவத் திற்காக இயேசு சிலுவைக்கு அறைப்பட்டார் என்பதை யும் புதுவாழ்விற்காக அவரது உயித்தெழுதலையும் நாம் விசுவாசிக்கவேண்டும். இதுதான் நற்செய்தி. இந்த நற்செய்தியை நாம் விசுவாசிக்க ஏதுவாக பரிசுத்தஆவி யானவரை தேவன் எமக்கு தந்தருளினார். அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப் பைக்குறித்தும், உலகத்தை கண்டித்து உணர்த்துவார். இந் நற்செய்தியினை நாம் விசுவாசிக்கும்போது, நாம் புதிய வாழ்க்கையை (நித்திய ஜீவனை) பெற்றுக்கொள் கிறோம். நித்தியஜீவனைப் பெற்றுக்கொண்ட நாம், பரலோகம் சென்றடையும்வரை முத்திரையாக, தேவன் பரிசுத்தஆவியைத் தந்து நம் இருதயங்களிலே தம் அன்பை ஊற்றியுள்ளார்.

விடுவிக்கப்பட்ட நமது வாழ்க்கைக்கு மன்னிப்பு, விடுதலை மாத்திரமல்லாது, நீதித்துவமும் பரிசுத்தமும் கொடுக்கப்பட்டதாக எண்ணப்படுகிறது. இந்நன்மையை முழுமையாக அறுவடைசெய்ய நாம், தேவன் தந்த பரிசை பொக்கிஷமாகக் கருதி அதை உரிமைபாராட்டி நாம் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும். தேவனுடைய அன்பின் நற்செய்தி பற்றிய வெறும் மன அறிவு விடுத லையை அல்லது அதிலிருந்து கிடைக்கும் நன்மை களைத் தரமாட்டாது. மாறாக வெளிப்படுத்தப்பட்ட அறிவே இதை நமக்குத்தரும். அதாவது, நாம் இதை இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

வெளிப்படுத்தப்பட்ட அறிவைப் பெறவேண்டு மெனில், இரவும் பகலும் தேவனுடைய வார்த்தையை நாம் தியானித்து அதை உள்ளத்தின் ஆழத்திற்கு பதிய வைக்கவேண்டும். தேவனுடைய அன்பை அறிவினால் அறிந்தால் மட்டும்போதாது. மாறாக வெளிப்படுத்தப் பட்ட அந்த அன்பின் அகலமும் நீளமும் உயரமும் இன்னதென்று அறியும் அறிவே கிறிஸ்துவின் பூரண அன்பினை உணரச் செய்யும் என எபேசியர் 3:18,19 ம் வசனம் தெளிவாக கூறுகின்றது. ஆகவே நாமும் தேவனின் பூரண அன்பிலே, அறிவிலே நிறைந்தவர் களாக முடியும்.

பணிவு, கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கிறோம் என்ற தைரியம், தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டோம் என்ற துணிவு, சாத்தானின் கட்டு நிந்தனை போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு, இவ்வுல கின் வெளிச்சம் ஆகிய காரியங்களை நமக்கு வெளிப்ப டுத்தப்பட்ட அறிவு தருகின்றது. நாம் தேவனுடைய பிள்ளை, புதிய சிருஷ்டி, பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் என்று தேவன் தமது கிருபையின்படி கூறுகின்றார். இதனால் நாங்கள் பரிசுத்த ஜீவியம் வாழ கடமைப்பட் டுள்ளோம். இது அவரது பூரண சித்தமாகும். அதாவது எமது ஆவி புதிதாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் எமது ஆத்துமாவும் புதிதாக்கப்பட வேண்டியதாயிருக்கின்றது. நமது சரீரமோ கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் மறுரூபமாக்கப்படுகின்றது.

**எமது ஆத்துமாவை புதிதாக்குவது எப்படி?**

எம்மிலிருக்கும் பலவீனம், சுய நீதி, மாமிசம் சுயம் போன்றவற்றை ஒருபக்கம் ஏற்றுக்கொள்வதோடு மறுபக்கம், தேவனின் இரட்சிப்பு எனும் வெகுமதியை உயர்வாகக் கருதி, இயேசு தந்த அந்த வெகுமதியை தொடர்ந்தும் விசுவாசிக்கவேண்டும் (சங்.103:1-5). தேவ அன்பினை நாம் தியானிப்போமானால், கிறிஸ்துவில் நிலைத்திருப்போம்(யோவான் 15:4,5). இதனை சுயபுத்தி யைச் சாராமல் முழு இருதயத்தோடு அவரின் வார்த் தையை தியானிப்பது என கூறலாம். இயேசுவிடம் முற்றும் சரணடைந்து, அவரை முற்றிலும் சார்ந்து, அவரது வல்லமையில் பெலப்படுவோமானால், அவரது பெலத்தில், அவரது அன்பில் உந்தப்பட்டவர்களாக திடமனதுடன் இருப்போம்.

"நாம் இயேசு இல்லாமல் ஒன்றுமே முடியாது என்ற நிலையில், கிறிஸ்துவில் நிலைத்திருக்கும்போது அவரின் கற்பனைக்குக் கீழ்ப்படிந்து சிறப்பான வாழ்வை வாழலாம். அவரது கட்டளையானது, முழு இருதயத் தோடு முழு மனதோடு முழு பெலத்தோடும் தேவனிடத் தில் அன்புகூருவதுபோல பிறரை நேசிப்பதாகும். இந்த அடிப்படை கொள்கைகள் உலகத்தின் கொள்கைகளி லிருந்து முற்றிலும் முரணானது. இவை இராஜ்யத்தின் கொள்கைகளாகும். நாம் இயேசுவில் நிலைத்திருக்கும் போது அவரது கட்டளைகள் இலகுவானதாகவும் எளிதானதாகவும் இருக்கும். அவற்றிற்கு கீழ்ப்படியும் போது அவை நித்திய வாழ்வுக்கு இட்டுச்செல்வதுடன் நமது சந்தோஷமும் பரிபூரணப்படும்.

தேவ கட்டளைகள், நமது வாழ்வுக்கான தேவ திட்டத்தை உள்ளடக்கியுள்ளது. இத்திட்டமானது தேவ இராஜ்யத்தை விஸ்தரிக்கின்றது. தேவனை மகிமைப் படுத்த அவருக்கு பணிபுரியும் சிலாக்கியத்தை இது தருகின்றது. அவரின் திட்டத்தை நிறைவேற்றும்போது அவரது வாக்குத்தத்தம் கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கும். எனினும் இயேசுவால் தோற்கடிக்கப்பட்டவனும் இன்னமும் நிர்மூலமாக்கப்ப டாத வனுமான எதிரியான சாத்தான் மனிதனையும் உலகத்தையும் தனது வஞ்சனையால் வசீகரிப்பான் என தேவன் எச்சரித்துள்ளார். அத்துடன் பிளவை ஏற்படுத்தும் சாத்தானுக்கு எதிர்த்து விழிப்புடன் வாழும் படி தேவன் நமக்கு கட்டளையிட்டுள்ளார். அப்படி எதிர்த்து நின்றால், ஒருவழியாக வருகிற எதிரியானவன் ஏழுவழியாக ஓடிப்போவான். ஆகவே கிறிஸ்துவில் நிலைத்திருந்து அவருக்கு கீழ்ப்படிந்து அன்பின் சாரம் சமாகிய தேவ இராஜ்யத்தின் நீதியை கட்டியெழுப்பு வோமாக. இதன் பிரதிபலிப்பு தேவனை எல்லாவற்றி லும் மகிமைப்படுத்துவதாகும். ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




***கேள்வி :*** **விசுவாசிகள் திரைப்படம் பார்க்கலாமா?**

***பதில் :*** இக்கேள்வி பத்தாண்டுகளுக்கு முன், "கிறிஸ்தவர் ஒருவர் சினிமா தியேட்டருக்குப் போகலாமா?" என கேட்கப்பட்டிருந்தது. இதற்கு சங்கீதம் 1:1ஐ சுட்டிக்காட்டி கிறிஸ்தவ பெரியோர்களும் பிரசங்கிமார்களும் "கூடவே கூடாது" எனப் பதிலளித்தனர். "பரியாசக்காரர் உட்காருமிடத்தில்" தேவ மக்களுக்கு என்ன வேலை என்பதே விவாதப் பொருளாயிருந்தது. இன்றோ நிலை முற்றிலும் மாறிவிட்டது. திரைப்படம் பார்க்கத் திரையரங்கத்திற்குப் "போக" வேண்டியதில்லை; திரையரங்கமே நமது வீடுகளுக்குள் "வந்து"விட்டது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளானது நவீன முன்னேற்றத்தின் சூழ்நிலை காரணமாக நிலைமைகளை மாற்றி விட்டது.

திரையரங்கத்திற்குச் செல்வது பயங்கரமான ஒரு பாவம் எனக் கருதப்பட்ட குடும்பத்திலேயே சிறு வயது முதல் வளர்க்கப்பட்டேன். சினிமாதான் "சின்மா" (Sin-ma) அதாவது 'பாவங்களுக்கெல்லாம் தாய்' என்றனர் சபை தலைவர்கள். ஆயினும், எனது தம்பியும் நானும் ஆண்டுக்கு ஒரு படம் பார்க்கவாவது அனுப்பும்படி அம்மாவை நச்சரிப்போம். விருப்பமின்றி அவர்களும் சம்மதித்து தரை டிக்கட்டிற்கு நாலணா கொடுப்பார்கள். படம்முடிந்து வீடு திரும்பியதும், நாங்கள் தியேட்டரிலிருந்த மூன்று அல்லது நான்கு மணிநேரம் ஆபாசமான காட்சிகளால் எங்கள் மனம் கறைப்பட்டுவிடக்கூடாது என்று எவ்விதமாக முழங்காலிலேயே கண்ணீர்விட்டுதான் ஜெபித்தார்கள் என்று அம்மா சொல்லுவார்கள். அந்நாட்களை நான் பின்திரும்பிப் பார்க்கும்போது, அவ்விதமான கண்டிப்பான வளர்ப்பிற்காய் இன்று எவ்விதத்திலும் நான் வருந்தவில்லை.

திரைப்படம் எதையும் பார்ப்பதேயில்லை என்று மறுபடியும் பிறந்த வாலிபர்கள் இன்று உறுதியாக தீர்மானித்து வாழ்வார்களானால் அது நன்றே. அதினால் அவர்கள் வாழ்க்கையில் எதையும் இழந்துவிட போவதில்லை. அதேசமயத்தில், திரைப்படங்கள் அத்தனையையும் ஒட்டுமொத்தமாய்க் கண்டனம் செய்வதும் சரியல்ல. சன்மார்க்கம், ஒழுங்குநெறிகள், சமுதாயம், அரசியல் மற்றும் கலாச்சாரத்தைத் தழுவிய உயரிய கருத்துக்களைச் சீரியமுறையில் வழங்கும் படங்களும் உண்டு. இவ்விதப் படங்கள் நமது சிந்தனைக்குரிய உணவூட்டி நமக்குச் சவாலிடுகின்றன. அர்த்தமற்ற சில பாரம்பரியங்கள், சடங்காச்சாரங்கள் மற்றும் சம்பிரதாயங்கள் இக்கதைகளில் தூக்கியெறியப்படுகின்றன. பண்டைக்காலக் குடும்ப நன்னெறிகள் மற்றும் காலம் போற்றும் தத்துவங்களைச் சமுதாயத்திற்குள் திரும்பக் கொண்டுவரும் நோக்கோடு படங்கள் தயாரிப்போருமுண்டு. "ஜோணி" என்ற கிறிஸ்தவ ஆங்கிலப் படமும், "மயூரி" போன்ற பொதுவான படங்களும் ஊனமுற்றவர்களை உற்சாகப்படுத்தி அங்கவீனரை அயராது முயற்சிக்க ஊக்குவிக்கின்றன. இவ்விதப் படங்களைப் பார்க்க, தங்கள் மாணவ மாணவியரை ஆசிரியர்களே அழைத்துச் செல்வது வரவேற்கத்தக்கது.

புதிதாய் வெளிவரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருள் சார்ந்த விமர்சனங்களைச் சேர்த்து திரைப்பட வழிகாட்டி எனும் நூலாக அவ்வப்போது வெளியிடும் நிறுவனங்கள் முன்னேற்றமடைந்த நாடுகளில் உண்டு. பயங்கரம் மற்றும் பால்வினை போன்றவை ஒவ்வொரு படத்தில் எவ்வளவு இருக்கின்றனவென்றும் எந்தெந்த வயதினர் அதைப் பார்க்கலாமென்றும் எப்புறச் சாய்வுமின்றி அப்படம்பற்றிய விமர்சனம் விளக்கப்பட்டிருக்கும். இக்குறிப்புகளைப் பெற்றோர் நன்கு வாசித்து தங்கள் பிள்ளைகளோடு உட்கார்ந்து பேசி அப்படத்தை பார்க்கலாமா, கூடாதா என்று தீர்மானிப்பார்கள். இவ்வழக்கம் நமது நாட்டில் அதிகமில்லை. எனவே படங்களைத் தெரிந்தெடுப்பதில் இளைஞர் அதிகக் கவனமாயிருக்க வேண்டும். திரைப்படப் பொழுதுபோக்கு தங்களுக்கு வேண்டுமென்று விரும்பும் இளைஞர் புதுப்படமொன்று வெளிவந்தவுடனேயே பார்க்க விரையாது, அப்படம் தங்களுக்குப் பயனளிக்குமாவென சிலாகித்து தெரிந்து கொள்ள சற்று காலதாமதம் செய்வது நல்லது.

சுவரொட்டிகளையும் தொலைக்காட்சி விளம்பரங்களையும் மட்டும் பார்த்து ஏமாந்துவிடாதீர்கள். இது நீங்கள் உருவேற்கும் காலம். உங்கள் இதயமாகிய பொன் பூமியில் எதை விதைத்தாலும் நன்கு விளையும். களையெடுப்பது சுலபமல்ல. நிதானமாய் இருங்கள். உங்கள் சிந்தனைகளும் கணிப்புகளும் உணர்ச்சிவசம் நிறைந்தவையாக இன்று இருக்கக்கூடும். வளர்ச்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிர்ச்சியும் தான் உரிய பகுத்தறிவுத் திறனைப் பெருக்கும் (எபி 5:14).

எது முக்கியம் என நாம் கவனிக்கவேண்டும். என்றுமில்லாதளவு படிப்பில் போட்டி பெருகியுள்ள இக் காலத்தில், மாலைவேளைகளில் கூட விளையாட நேர மில்லை என்றிருக்கும்போது, மாணவர் தமது பொன் னான நேரத்தைத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் வீணடிப்பதெப்படி? வெளிவேலைசெய்வோர் தேவனுக்கு முன் காத்திருக்கவும், அவரது வசனத்தைத் தியானிக்க வும், அவருக்காக சாட்சிபகரவும் நேரமேயில்லை என்று அங்கலாய்க்கும்போது, திரைப்படங்கள் பார்க்கக்கூடிய நேரமெங்கே? கிறிஸ்தவ சீடத்துவத்தில் நேரத்தைப் பற்றிய உக்கிராணத்துவம் அதிக முக்கியமானது.

திரைப்படத்தைக் குறித்த கேள்விக்கு சுலபமாக "ஆம்" அல்லது "கூடாது" என்று பதில் சொல்லிவிட முடியாது. ஆனாலும், எல்லாவற்றிற்கும் மேலோங்கி நிற்கும் வேதத் தத்துவம் ஒன்றுண்டு. அதாவது, "எல்லா வற்றையும் சோதித்துப் பாருங்கள்; நல்லதைப் பிடித்துக் கொள்ளுங்கள்; தீதானதாய்த் தெரியும் எல்லாவற்றை யும் விட்டுவிலகுங்கள். கடவுள் தாமே உங்களை முற்றிலும் தூய்மையாக்குவாராக!" (1தெச 5:21-23).

## *கேள்வி* : விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைச் சாப்பிடலாமா?

*பதில்* : தென்னாசியாவில் 80 சதவீத மக்கள் விக்கிரக வணக்கத்தை கொண்டுள்ளனர். அவர்களில் 3 சதவீதத் திற்கும் குறைவாகவே கிறிஸ்தவர்கள் உள்ளனர். கிறிஸ்தவரல்லாத, அதிலும் குறிப்பாக பெரும்பான்மை யினரான இந்துக்களை, பௌத்தர்களை நண்பராக்கிக் கடவுளது அன்பின் செய்தியை அவர்களுக்கும் பகிர்ந்து அளிக்கும் சவால் எம்மிடமுண்டு.

நாம் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் அல்லது கிறிஸ்துமஸ் விருந்துக்கு அழைக்கும்போது அவர்கள் மகிழ்ச்சியுடன் வந்து கலந்துகொள்கின்றனர். நாம் தேவ னுக்கு நன்றிசெலுத்திவிட்டு எல்லாருக்கும் பரிமாறுகிற உணவை சாப்பிடுவதில் அவர்களுக்கு பிரச்சினையே இல்லை. ஆனால் அவர்கள் நம்மை தங்கள் பண்டிகை விருந்துகளுக்கு அழைக்கும்போது நமக்குப் பொங்கல் அல்லது இனிப்பு வகைகள் அனுப்பும்போது அதை உட்கொள்ள நாம் தயங்குகிறோம்; அது அவர்களைப் புண்படுத்துகிறது. உறவுப் பிரச்சனையை உருவாக்குகி றது. ஒருசில விசுவாசிகள் எதையும் சாப்பிடுவார்கள்; மற்றவர்களுக்கோ அதைக் குறித்த தயக்கம் உண்டு. இதைக் குறித்து வேதம் கூறுவதென்ன?

புதிய ஏற்பாட்டு நிருபங்கள் எழுதப்பட்ட கால மானது, இந்தவிடயத்தில், இன்றைய நிலைமைக்கு ஒப்பாக இருந்தன. இளம் சபைகளுக்கு எழுதும்போது விக்கிரகங்களுக்குப் படைக்கபட்டவைகளைச் சாப்பிடு வது குறித்த காரியம் முக்கியமானதொன்றாயிருந்தது. கொரிந்தியருக்கு பவுல் எழுதிய காரியத்தையே அவன் விவாதிக்கிறான். அவற்றைக் கவனமாய்ப் படியுங்கள். அவைகளிலிருந்து நாம் கற்பவை இதோ :

சரியாகச் சொன்னால், விக்கிரகமானது "ஒன்று மேயில்லை" (1கொரி.8:4; ஏசா.37:19; எரே.16:20). எனவே விக்கிரகங்களுக்குப் படைக்கப்படும் எந்த ஆகாரமும் கறைப்பட்டுபோவதில்லை. ஆயினும், விக்கிரகாராதனை செய்பவர்களுக்கு அதில் தெய்வீக அர்த்தமுண்டு. அவர்களது மனப்பான்மையைக் குறித்துப் பேசும்போது விக்கிரகங்களைப் பவுல் "பேய்கள்" என்றழைக்கிறான் (10:20). இந்த அடையாளம் அவர்கள் மனதிலுண்டு. ஆகாரத்தை விக்கிரகங்களுக்கு படைக்கும்போது அது புனிதமடைகிறதென்பது விக்கிரகாராதனைக்காரரின் மன விசுவாசம். இந்தப் பாணியில் அல்லது இக் கண்ணோட் டத்தில் விக்கிரகாரதனைக்காரர் எவரும் படைக்கப்பட்ட ஆகாரத்தைக் கொடுத்தால் கிறிஸ்தவர் எவரும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது (1கொரி.10:20,27). அதை ஒரு புன்முறுவலோடு, பண்பாக வாங்க மறுத்துவிடலாம். அவர்கள் இன்னும் வற்புறுத்தினால் அதைப் பெற்றுக் கொண்டு பின்னர் பட்டினியால் வாடும் யாராவது ஒருவருக்கு அமைதியாகக் கொடுத்துவிடலாம்.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட ஆகாரம் வழங்கப்படும் மூன்று இடங்களைப் பவுல் குறிப்பிடுகி றார். அ) கோவில்கள். ஆ) வீடுகள். இ) கடைகள். "விக்கிரகக் கோவிலுக்குள்" எந்தக் காரணத்தையிட்டும் கிறிஸ்தவனொருவன் பந்தியிருக்க முடியாது (1கொரி. 8:10). வெளிப்படையான இச்செயல் கிறிஸ்துவையே அவமானப்படுத்துவதாகவும், விக்கிரகங்களை விட்டு உயிருள்ள தேவனிடம் திரும்பியுள்ள புதுவிசுவாசிகளை உற்சாகம் இழக்கச் செய்வதாகவும் அமையும். ஆனால் விக்கிராராதனைக்காரரின் வீட்டில் குடும்ப விருந்து ஒன்றிற்கு அழைக்கப்பட்டால், நாம் போய் "ஒன்றையும் விசாரியாமல்" சாப்பிடலாம்(1கொரி.10:27). உண்மை யான நண்பர்கள் எவரும் பிலேயாமை போலவோ யேசபேலைப்போலவோ நமக்குக் கண்ணியாக இருக்க மாட்டார்கள் (வெளி.2:14,20). அடுத்து கடையில் விற்கப் படுகிற உணவை எடுத்துக்கொண்டால், மிருகங்களை அறுக்குமுன் முகமதியர் ஓதுவார்கள். உணவகங்கள் அல்லது கடைகளில் இந்துக்கள் இனிப்பு கார வகை களைச் செய்தவுடன் தேவர் தேவதைகளின் படங்க ளுக்குமுன் அதை வைப்பார்கள். நாம் இதையெல்லாம் பற்றி ஒன்றும் நினைக்காமல், பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையதானதால், "கடையில் விற்கப்படுகிற எதை யும் ஒன்றையும் விசாரிக்காமல்" வாங்கிச் சாப்பிடலாம் (10:25,26). படைப்பின்படி மிருகங்கள், பறவைகள், செடி கொடி மரங்கள் யாவும் ஆண்டவருக்குச் சொந்தமான வையாகும். நாமும் அவருக்குச் சொந்தமானவர்களாக இருப்பதினால் அவை யாவற்றையும் நாம் அனுபவிக்க கூடுமே! எல்லாம் திருவசனத்தினாலும் துதி ஜெபத்தி னாலும் பரிசுத்தமாக்கப்படுகிறது (1தீமோ 4:4,5).

1கொரிந்தியர் 8,10 ம் அதிகாரத்திலும் ரோமர் 14 இலும் பவுல் போதிக்கும் அடிப்படைத் தத்துவம் என்னவென்றால், சத்தியத்தின் அறிவும் கிறிஸ்துவுக்குள் ளான சுயாதீனமும் நமது சகோதர சகோதரிகளின் "பலவீன மனசாட்சியைப் புண்படுத்தாமலும்" அவர்க ளுக்கு "தடுக்கலாக" இராதபடிக்கும் பார்த்துக்கொள்ள வேண்டும் (1கொரி 8:9,12). நமக்கு பரிமாறப்படும் எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாரத்தையும் சாப்பிடுவதில், தீர்க்கமாக கூறினால், அதில் எந்தத் தவறுமில்லை. எனினும், சகோதரனுக்கு "இடறலுண்டாக்கி" அவன் "கெட்டுப்போக" நாம் காரண மாயிருந்தால் அது பாவமே (1கொரி 8:13,11). நாம் செய்யும் எதுவும் மற்றவர்களுக்கு இடையூறாயிருக்கக் கூடாது (1கொரி 10:24,32,33; ரோமர் 14:14,15,21).

சுருக்கமாக தொகுத்து கூறினால், ஒருபோதும் வேத சத்தியத்தை தளர்த்தி, அதனோடு நாம் ஒத்துப் போக முடியாது. விக்கிரக வணக்கமுள்ள நண்பர்களை விரோதித்து விடவும் கூடாது; பலவீன விசுவாசிகளை அற்பமாக எண்ணவும் கூடாது. 1கொரிந்தியர் 10:32 ஐப் "பெயர்க் கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்தவரல்லாதவருக் கும், மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களுக்கும் முன்பாக இனி இடறலற்றவர்களாக இருங்கள்" என்று விளக்க மொழியாக்கம் செய்யலாம்!

## *கேள்வி :* விளையாட்டுப் போட்டிகள் நேர வீணடிப்பா?

*பதில் :* வாலிபர்கள் நடுவில் ஊழியம் செய்பவர்களிடம் இக்கேள்வி ஒருசிலரினால் அடிக்கடி கேட்கப்படுகிறது. இரட்சிக்கப்பட்டவுடன் சில வாலிபர்கள் தங்கள் ஓய்வு நேரங்கள், மாலைவேளைகள் யாவற்றையும் ஜெபம், மற்றும் இதுபோன்ற ஆன்மீகக் காரியங்களில் செலவிட தொடங்குகின்றனர். மற்றும் சிலருக்கு விளையாட்டுகள், போட்டிகள் ஆகியவற்றை விட்டுவிடுவது மிகவும் கடின மாயிருக்கிறது. நாளாவட்டத்தில், தங்கள் ஆன்மாவுக் காக நேரம் செலவழிப்பதற்குப் பதிலாக விளையாட்டு களில் ஈடுபடுவது நேர வீணடிப்போ என்று இரண்டாம் வகுப்பினருக்கு ஒருவிதக் குற்றவுணர்வும் ஏற்படுகிறது. இந்தக் கேள்விக்கு வேதத்திலிருந்து பதிலுண்டா?

விளையாட்டு போட்டிகளை நேரடியாக வேதம் ஊக்குவிக்காவிடினும், அவற்றை வேதாகமம் எங்கும் கண்டனம் செய்ததில்லை. கிரேக்க நாட்டிலும் ரோம் நகரிலும் நடந்த பொது விளையாட்டுகளிலிருந்து பல உதாரணங்களை கையாண்டு புதிய ஏற்பாட்டு எழுத்தா ளர்கள் ஆன்மீகக் கருத்துக்களை விளக்கியுள்ளனர். சிலம்பம், குத்துச் சண்டை, ஓட்டம் போன்றவற்றை அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிட்டுள்ளார் (எபே.6:12; 1தீமோ.6:12; 2தீமோ.4:7; 1கொரி.9:24-27). மற்ற அப்போஸ் தலரும் விளையாட்டுப் போட்டிகளின் பதங்களைப் பயன்படுத்தியுள்ளனர் (1பேது.1:4; எபி.12:1,2; யாக்.1:12). மோசே ஒரு சிறந்த குத்துச்சண்டை வீரனாக இருந்தி ருக்கவேண்டும்(யாத்.2:11,12). மலை ஏறுவதிலும் அவன் வித்தகன். குறிவைத்து எய்வதில் தாவீது தலைசிறந்த வீரன். ஆட்டிடையனாக தனது இளம்பருவத்தில் அவன் இக்கலையில் தன்னைப் பயிற்றுவித்திருப்பான் (1சாமு 17:20, 40, 48-50).

விளையாட்டுப் போட்டிகள், அவற்றில் கலந்து கொள்வோருக்குப் பல நன்மைகள் அளிக்கின்றன. ஒரு நல்ல விளையாட்டு வீரன் உடற்கட்டுப்பாட்டைக் கற்றுக் கொள்கிறான். இது கிறிஸ்தவ வாழ்விற்கு எவ்வளவாய் தேவை! (1கொரி.9:24-27). சட்டத்திட்டங்களுக்குக் கீழ்ப் படிவது அடுத்த காரியம். கிறிஸ்தவ ஊழியத்திலும் "என்ன" என்பதைவிட "எப்படி" என்பதுதானே காரியம்? (2தீமோ.2:5; 1கொரி.3:10) வேறெங்கும்விட விளையாட்டு களில்தான் நாம் குழுவுணர்வைக் கற்றுக்கொள்கிறோம். கிறிஸ்தவ வட்டாரங்களில் இதற்குத்தான் பஞ்சம்! சலிக்காது தாக்குப்பிடித்து முயற்சிப்பது விளையாட்டுத் துறையில் உருவாகும் இன்னொரு அருங்குணம் (எபி. 12:1,2; அப்.20:24). விளையாட்டுவீரர் எப்பொழுதுமே பதக்கத்தின்மீது கண்ணை வைத்திருப்பார்கள். அதை விடக் குறைவானதெதுவும் அவர்களைத் திருப்திப்படுத் தாது. இந்த நோக்கு திருச்சபையில் இல்லாததாலேயே, உன்னதமானவருக்கு உசிதமானதைச் செய்கின்ற கிறிஸ்தவர் இன்று மிகச் சிலரே.

விளையாட்டுகளிலும் போட்டிகளிலும் கலந்து கொள்ள வாலிபரை சபைகளும் ஊழியங்களும் ஊக்கு விக்கவேண்டும். தேவஆவியால் நிறைந்த மருத்துவர் பிற மருத்துவரைவிடச் சிறந்தவராயிருப்பார். தேவாவி யானவரால் நிறைந்த பொறியியலர் பிற பொறியியலரை விடச் சிறந்தவராயிருப்பார்; அப்படியே தேவ ஆவியால் நிறைந்த விளையாட்டு வீரர் பிற விளையாட்டு வீரரை விடச் சிறந்தவராயிருக்க முடியும் என நான் உறுதியாய் நம்புகிறேன். கர்த்தருடைய கரம் தீர்க்கன் எலியா மீது வந்தபோது அவன் ஆகாப் அரசனின் இரதத்தைவிட வேகமாக ஓடவில்லையா?(1இரா.18:44-46) ஆவியானவர் சுவிசேஷகன் பிலிப்புவை உந்தித்தள்ளியபோது அவன் வேகமான எத்தியோப்பிய இரதத்தை முந்த முடியவில் லையா? (அப். 8:29,30). அது ஒரு காட்டோட்டம்! சர்வ வல்ல தேவ ஒத்தாசையுடன் கிறிஸ்தவ விளையாட்டு வீரர்கள் கிறிஸ்தவரல்லாத விளையாட்டு வீரர்களைவிட "பத்து மடங்கு" சமர்த்தராயிருக்க முடியும் (தானி 1:20). முடியாதா? (ரோமர் 9:16). "என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்" என்று தாவீது மார்தட்டினான் (சங்.18:29). உயரம் தாண்டுவோர், இதை நினைவிற் கொள்ளுங்கள்!

ஒலிம்பிக்போட்டிகளில் கிறிஸ்தவ இளைஞர்கள் சவாலை சந்தித்து வெற்றிபெற முன்வருவார்களா? வேறு யாரால் இது முடியும்? கிறிஸ்தவ விளையாட்டு வீரர் தங்கள் விசுவாசத்தைச் சாட்சியாக பகிர்ந்துகொள்ளா விட்டால், அது இன்றைய இளைய தலைமுறையை எவ்வளவாய்ப் பாதிக்கும்! பணஆசைக்கும் ஊழலுக்கும் ஆசைப்படும் விளையாட்டு வீரர்களினால், தங்கள் நாட்டின் பெயரை எப்படிக் காப்பாற்ற முடியும்? கிறிஸ்தவ வாலிபரே, இச்சவாலைச் சந்திப்பீரா?

கல்வித்துறையிலும் கடும் போட்டியின் காரணத் தினால் தங்கள் பிள்ளைகள் படிப்பைத்தவிர வேறெந்தப் பயிற்சிகள், நிகழ்ச்சிகளிலும் பங்குபெறுவதை சில பெற்றோர் ஊக்குவிப்பதில்லை. இதனால் இளைஞரு டைய முழுமையான வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும். இளைஞரான இயேசு "ஞானத்தில்" மட்டுமல்ல, "வளர்த் தியிலும்" விருத்தியடைந்தாராம் (லூக் 2:52). வாலிபரின் பலத்தை நன்மை பயக்கும் உடற்பயிற்சி, விளையாட டுக்கள் போன்றவற்றில் செலவழிக்க வழிவகுக்காவிடில், அது பாவ காரியங்களுக்குள் பாய்ந்தோடிவிடும். நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவப் பருவத்தில் இலக்கிய பேச்சு போட்டிச் சங்கம், தேசிய மாணவர் படை, சாரணர் அணி, பள்ளி விழா நாடகங்கள் போன்றவற்றில் தீவிரமாய் ஈடுபட்டிருந்தேன். இவை ஒன்றுமே எனது இன்றைய ஊழிய மற்றும் தலைமைப் பொறுப்புகளுக்குப் பயனளிக்காது போக வில்லை. ஆனால் படிப்பில் முதன்மையாயிருக்க அதிக சிரத்தை எடுத்துக்கொண்டதால், போதுமானளவு நேரம் விளையாட்டு மைதானத்தில் செலவிடவில்லை. இன்று வரை எனக்கு நீந்தக்கூடத் தெரியாது போயிற்று!

சமநிலையைப் பேணும்படியாக இளைஞரை நான் அறிவுறுத்துகிறேன். படிக்க ஒரு நேரமுண்டு, சும்மாயிருக்க ஒரு நேரமுண்டு. ஜெபிக்க ஒரு நேரம் உண்டு, விளையாட ஒரு நேரமுண்டு. எந்தவொன்றை யும் அசட்டை செய்யவேண்டாம்; அளவுக்குமிறிச் செய்ய வும் வேண்டாம். நல்வாழ்த்துக்கள்!

## *கேள்வி :* கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை நாம் தேசிய மயமாக்க வேண்டுமா?

*பதில் :* தென்னாசியாவில் இன்றும் கிறிஸ்தவமானது வெள்ளைக்காரரின் மதம் என்றே கருதப்படுகிறது. காரணம் காலனித்துவம். கிறிஸ்தவரல்லாத நண்பர்கள் இதனால் கிறிஸ்தவத்தையும் கிறிஸ்து ஜெயந்தியையும் (நத்தார்) தூரமாக தள்ளிவைத்துள்ள ஒரு நிலைமை தோன்றியுள்ளது. ஆனால், இயேசுகிறிஸ்து கிழக்கிலோ மேற்கிலோ அல்ல, மத்திய கிழக்காசியாவிலுள்ள பெத்லகேம் நகரில் தான் பிறந்தார்.

இறைமகனின் பிறப்பை மந்தைவெளியிலுள்ள ஆயர்களுக்கு அறிவித்த தூதன் அது "எல்லா" மக்க ளுக்குமுரியதென பறைசாற்றினான். அது யூதருக்கோ அல்லது குறிப்பிட்டதொரு மக்கள் இனத்திற்கோ அல்ல, அனைவருக்குமான நற்செய்தி என்று பறைசாற்றினான் (லூக்கா 2:10).

தென்னாசியாவிற்குள் சுவிசேஷத்தை முதலில் கொண்டு வந்தது ஐரோப்பியர்கள் அல்ல. இயேசுவின் பன்னிரு சீடரில் ஒருவராகிய தோமா என்பவர் முதல் நூற்றாண்டிலேயே இயேசு கிறிஸ்துவின் செய்தியோடு பாரதத்தில் நுழைந்தார். எனவே கிறிஸ்தவத்திற்கு தென் ஆசியாவில் 2000 ஆண்டு சரித்திரமுண்டு. இப்படியிருக்க நாம் கிறிஸ்துவின் செய்தியை இன்னும் மேற்கத்திய கலாச்சாரத்திலேயே பொதிந்து மக்களுக்குக் கொடுத் தால் அது பெருங்குற்றமாகும். கிறிஸ்துவின் சுவிசேஷம் கலாச்சாரங்களுக்கு அப்பாற்பட்டது.

கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாட ஒருசில வழிமுறைகள் இதோ:-

கிறிஸ்துமஸ் கால சிறப்பே அதற்கு முந்திய நீண்ட கரோல் பவனிதான். அதைச் செய்பவர்கள் ஏற்கனவே தெரிந்ததைச் சொல்ல ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்தவ இல்லங்களுக்கே செல்வானேன்? நமது சுற்று வட்டாரத்திலுள்ள கிறிஸ்தவரல்லாதோரின் இல்லங்க ளுக்கு அந்தந்த பிராந்திய மொழிகளில் பாடல்கள் பாடி கரோல் பவனி சென்றாலென்ன? கிறிஸ்துமஸ் பாடல் பவனி கண்ணியமான பிச்சையெடுப்பு எனும் நிலைக்குச் சரிந்துவிடக் கூடாது! உறக்கத்திலிருக்கும் கிறிஸ்தவர்கள் உறங்கிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர் களைத் தொந்தரவு செய்கிறார்கள் என்பதே நத்தார் பாடல் பவனியைக் குறித்த எனது கணிப்பு. எனினும், அது தவறல்ல. பாடல் பவனியின்போது நமது கலாச்சா ரத்திற்கு ஏற்புடைய ராகங்களில் பாடல்களைப் பாட பயிற்சியெடுங்கள். இனிய தமிழ் சொற்கள் எளிதாகவும் தெளிவாகவும் இருக்கட்டும். நீங்கள் பவனியாய்ச் சென்று சந்திக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவரல்லாத குடும்பத்திற்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டையை அல்லது ஒரு புதிய ஏற்பாடு ஒன்றினை இலவசமாக அன்பளிப்பாக கண்ணியமான முறையில் வழங்குங்கள்.

கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகளை "புறமதத் தினருக்கு" அனுப்புவதில் தவறில்லை. முடியுமானால், மேல்நாட்டு மரங்கள், இலைகள், காட்சிகள் அடங்கிய படங்களைத் தவிர்த்திடுங்கள். உதாரணமாக பனிமான் படம் போட்ட வாழ்த்து அட்டைக்கு தென்னாசியாவில் ஏதாவது பொருளுண்டோ? நாம் நமது நாட்டுக்குரிய கலாச்சாரப் பின்னணியங்களில் கிறிஸ்தவ வாழ்த்து அட்டைகளை வரைய கிறிஸ்தவ ஓவியர்களை உற்சா கப்படுத்துகிறேன். மெழுகுவர்த்திக்குப் பதிலாக குத்து விளக்கு வரையலாம். சிலர் மெழுவர்த்தி தவறில்லை எனவும் குத்துவிளக்கு தவறானது எனவும் தவறான மனப்பால் குடிக்கின்றனர். குத்துவிளக்கானது நமது கலாச்சாரத்திற்குப் பொருத்தமானது. அப்படியே நமது வாழ்த்து வரிகள் தாய்மொழியில் இருப்பது மேலானது.

நத்தார் அலங்கரிப்புகளிலே சிறந்த மாற்றத்தை நாம் கொண்டுவர வேண்டும். சவுக்கு மரக்கிளைகளை விட மாவிலைத் தோரணம் தமிழர்களுக்கு ஏற்புடையது. மாவிலைகள் இந்துப் பண்டிகைகளோடு சம்பந்தப்பட்ட இலைகள் என்று என்னிடம் சொல்லாதீர்கள். டிசம்பர் 25, கிறிஸ்மஸ் தாத்தா, கிறிஸ்மஸ் மரம் போன்ற மேற்கத் தேய பாரம்பரியங்கள் அஞ்ஞான மார்க்கத்தாரிடமிருந்து தோன்றியவை என்பது உங்களுக்கு தெரியுமா? நத்தார் போட்டிகளில் கிறிஸ்தவரல்லாத சிறுவர் சிறுமிகளையும் சேர்த்துக்கொள்ளுங்கள். தூதன் வெள்ளை வெளே றென்று இருக்கத் தேவையில்லை. அவன் ஆசிய பிரவுண் அல்லது ஆபிரிக்க கருப்பு நிறத்திலும் இருக்கலாம். கூடாதா?

கிறிஸ்தவரல்லாதோருக்கென சிறப்பானதொரு கிறிஸ்மஸ் ஆராதனை நடத்த உங்கள் சபைப் போதகர் மற்றும் மூப்பரோடு உட்கார்ந்து பேசுங்கள். பாமாலைப் பாடல்களுக்குப் பதிலாக பஜனைப் பாடல்களிலும் பயிற்சியெடுங்கள். இவ் ஆராதனைக்குக் கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் கிறிஸ்தவரல்லாத ஒருவரையாவது அழைத்துவருவதோடு ஆராதனைக்கு முன்பும், பின்பும், ஆராதனை நடக்கும்போதும் கிறிஸ்தவர்கள் யாவரும் தங்களைக் கிறிஸ்தவரல்லாத விருந்தாளிகளை விருந் தினர்களாக நடாத்தவேண்டும். தேவ ஆலயத்திற்குள் நுழைகையில் கூடியவரை காலணிகளைக் கழற்றி விடுங்கள். ஆலயத்திற்குள் நுழையும்போது செருப்பு போட்டுக்கொண்டிருப்பதை, கிறிஸ்தவரல்லாத தென்னா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிய மக்களின் கலாச்சார பழக்கவழக்கம் ஏற்றுக்கொள்ளாது. அது அவர்களினால் செரிக்க முடியாது. சில கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகளில் காலுறைக்குள் (Socks) வெகுமதிகளைப் போட்டு மேலே தொங்கவிடுவதெல்லாம் தென்னாசிய கண்ணோட்டத்தில் அருவருப்பானவை!!! கிறிஸ்தவர்கள் தங்கள் கலாச்சாரங்களை மதிக்கவேண்டும்.

கிறிஸ்துமஸ் விருந்துக்கு கிறிஸ்தவரல்லாத உங்கள் அயலகத்தாரை அழையுங்கள். உங்களுக்குப் பதில் செய்யமுடியாத எளியவருக்கு உணவளியுங்கள். கிறிஸ்தவர்களென்றாலே பன்றிக்கறி சாப்பிட்டு, குடித்து, ஆடுகிறவர்களென்பதுதான் சில தென்னாட்டு மக்களின் கருத்து! கிறிஸ்துவின் நாமத்தின்மீது நிந்தையைக் கொண்டு வந்துள்ள இக் களியாட்டுகளிலிருந்து நாம் மனந்திரும்புவோமாக. கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மீது இருந்த யூத ஆடையைப் பவுல் கழற்றியெறிந்தான். கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மேலிருந்த இலத்தீன் ஆடையை மார்ட்டின் லூத்தர் கழற்றியெறிந்தார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மேலிருக்கும் ஐரோப்பிய ஆடையினை கழற்றியெறியவேண்டியது நமது பொறுப்பு.

இங்கு எழுதியவைகளில் சிலவற்றைப் பலர் ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். ஆனால் தனிவாழ்விலும் கூட்டுவாழ்விலும் இவ்விதப் புரட்சி மாற்றங்களை நாம் ஏற்படுத்திக்கொள்ளாவிட்டால், இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகள் கொடுக்கப்பட்டாலும் நமது சமுதாயத்தை எம்மால் அசைக்க முடியாது போகும் என்பதை மிஷனரி சிந்தையுள்ள கிறிஸ்தவர்கள் ஒத்துக்கொள்வார்கள்!

**(இக் 'கேள்வி பதில்' டாக்டர் ஆர்.ஸ்டான்லி அவர்களின் 'தெளிவான பதில்கள்' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. ஆவிக்குரிய வாழ்க்கை, வேதாகமம், நடைமுறை வாழ்க்கை சம்பந்தமான உங்கள் கேள்விகளை 'கேள்வியும் பதிலும், சத்தியவசனம், த.பெ. 1012 கொழும்பு' என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்)** ❑

# ஓ மனிதனே.... எல்லாம் உனக்காக.

**பிறிஸ்கா ரூபசிங்க**

வானங்களைப் படைத்தேன்
உனக்காக!
பூமியைப் படைத்தேன் உனக்காக!
வெளிச்சத்தை உண்டாக்கினேன்
உனக்காக!
வெளிச்சத்தையும் இருளையும்
வேறு பிரித்தேன் உனக்காக!

ஆகாய விரிவை
(ஓட்சிசன் கலந்த வாயு- சுவாசிக்க)
உண்டுபண்ணினேன் உனக்காக!
பூமியிலே ஜலத்தை ஒரு புறமாக
தள்ளினேன் உனக்காக!
பூமியிலே வெட்டாந்தரையை
உருவாக்கினேன் உனக்காக!

கனி தரும் மரங்களைப்
படைத்தேன் உனக்காக!
சூரிய சந்திர நட்சத்திரங்களைப்
படைத்தேன் உனக்காக!
ஆகாயத்துப் பறவைகளை
உண்டாக்கினேன் உனக்காக!
மீனினங்களை உண்டாக்கினேன்
அதுவும் உனக்காக!

சகல ஜீவ ஜந்துக்களையும்
உண்டாக்கினேன் உனக்காக!
ஆனால் உன்னையோ நான்
உண்டாக்கினேன் எனக்காக!



நீயோ போய் விட்டாய்
அழிவுக்காக...!
மாம்சத்தின் இச்சைக்காக ....!
கண்களின் இச்சைக்காக ...!
ஜீவனத்தின் பெருமைக்காக ....!
இறுதியில் வஞ்சகன் தன் சொல்லால்
மயக்கினான் உன்னை அழிவுக்காக!

போராடினாய் உன் மீட்புக்காக!
வழிபட்டாய் அவனைப் பக்திக்காக!
விடுவேனா உன்னைஅழிவுக்காக!
விரைந்தேன் உன்னை மீட்பதற்காக!
வஞ்சகன் விலைபேசினான்
என் உயிருக்காக!
விரைந்தே அளித்தேன்
உன் மீட்புக்காக!
என்னையே உயிர்ப்பலியாக!

எனினும் அவன் மறைத்தான்
உன் கண்களை கணக்காக!
இன்னும் நான் தாமதிக்கிறேன்
உன் வருகைக்காக!
கீழ்படிவுடன் ஏற்றுக்கொள்வாய்
உன் இரட்சிப்புக்காக!
இயேசுகிறிஸ்துவை
உன் சொந்த இரட்சகராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீஷத்துவமும் கர்த்தத்துவமும்...

- இ. வஷ்னி ஏனர்ஸ்ட் -



கிறிஸ்து இயேசு எமக்காக பிறந்தார் என்ற நற்செய்தியில் மகிழ்ந்து களிகூருகின்ற நாம், அவரின் கர்த்தத்துவத்தைக் குறித்த சரியான அறிவைப் பெற்றுக் கொள்வதானது கிறிஸ்தவ விசுவாசத்தின் பெலனாகவும் சீஷத்துவத்தின் அடிப்படையாகவும் இருக்கின்றது. அதாவது “தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ” (யோவான் 3:16) அவனே சீஷன் என அழைக்கப்பட தகுதியுள்ளவன். இன்னும் சொல்லப்போனால், இயேசு கிறிஸ்து ஒருவரே மேசியா, தேவன் தமது ஒரேபேறான குமாரனான இயேசுவை மேசியாவாக எமது இரட்சிப்புக்காகத் தந்தார் என்று முழு விசுவாசத்தோடும் நம்புவதே சீஷத்துவத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கின்றது. அதாவது கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை ஏற்றுக்கொள்வதாக இருக்கின்றது. அவற்றைக் குறித்து இனி காண்போம்.

***சீஷத்துவம், கர்த்தத்துவத்தைக் கற்றுக்கொள்ளும்.***

சீடனைக் குறிக்கும் மதற்றேஸ் (mathetes) என்ற கிரேக்கச் சொல்லானது புதிய ஏற்பாட்டிலே 260 தடவைகள் வருகின்றது. இச்சொல்லானது மன்தனோ (manthano) என்ற சொல்லிலிருந்து வருகின்றது. இதன் கருத்து “கற்றுக்கொள்” என்பதாகும். (மாற்கு 13:28; மத். 9:13; மத். 11:29; 1கொரி. 14:35) அதாவது, “மாணவன்”, “போதனையைப் பெறுபவன்” என பொருட படுகின்றது. அதாவது தேவனை நாம் கற்று அறிந்து கொள்ள அவரது சீஷராக நாம் மாறவேண்டியுள்ளது. “தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.” (யோவா-1:18) என்ற வார்த்தையின்படி நாம் பிதாவின் குமாரனாகிய கிறிஸ்துவை அறிந்துகொள்வதோடு அவரைப் பின்பற்றுவதே சீஷத்துவமாகின்றது. ஆகவே கிறிஸ்து இயேசுவில் கற்றுக் கொள்கிறவன் எவனோ அவன் கர்த்தத்துவத்தை கற்றுத் தேறினவனாகவும் நல்லதொரு சீஷனாகவும் மாறுவான் என்பது நிச்சயம்.

லூக்கா எழுதிய அப்போஸ்தலரில், கிறிஸ்துவைப் பின்பற்றும் அனைவரும் சீடர்கள் என அழைக்கப் படுகின்றதைக் காண்கிறோம் (6:1,2; 9:1; 14:22; 21:4,16) இத்தகைய சீடர்களுக்கே முதன் முதலில் கிறிஸ்தவர் என்கின்றதான பெயர் அந்தியோகியாவில் வழங்கலாயிற்று (அப்.11:26).

சீஷத்துவத்தைப் பின்பற்றுகிறவன் கிறிஸ்துவிலுள்ள கர்த்தத்துவத்தைப் பின்பற்றுபவனாக இருப்பான். அப்படியாயின், தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாக இராதவன் (யோவா.3:18) எவனோ, அவன் இயேசுவுக்கு சீஷனாக இருக்கமுடியாது. இன்னொரு வார்த்தையில் கூறினால், இயேசுவுக்கு சீஷனாக இராதவன் அவருடைய கர்த்தத்துவத்தை அறிந்துகொள்ள மாட்டான். மேலும் இயேசு “நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்”(யோவா.13:35)என்று தன்னுடைய சீஷர்களிடம் போதித்து அவர்களை கர்த்தத்துவ குணாதிசயத்திலே உபதேசித்து அதிலே வளரச்செய்வதைக் காண்கிறோம். நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவதினாலேயே நாம் கர்த்தத்துவத்தை அறிந்து அவருடைய வழிகளில் நிலைத்து நிற்கிறோம். “நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள்” (மத்-19:17) என இயேசு போதித்துள்ளார்.

***சீஷத்துவம், கர்த்தத்துவத்தை ஏற்றுக்கொள்ளும்.***

கர்த்தராகிய இயேசுவில் விசுவாசம் வைத்த நபர்களே “கிறிஸ்தவர்கள்” “அவருடைய சீஷர்கள்” என அழைக்கப்படுகின்றனர். இயேசு தமது கர்த்தத்துவத்தை சீஷர்களுக்கு வெளிப்படுத்தினார். “இயேசு முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.” (யோவா-2:11). இதை “அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்.” (யோவான் 2:23; 8:30) அவ்வாறே சீஷர்கள் இயேசுவின் கர்த்தத்துவத்தை விசுவாசித்து அதனை ஏற்றுக்கொண்டனர். “அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை” (ரோமர் 9:33). ஆகவே, கர்த்தத்துவத்தை அறிந்துகொள்வதோடு அதனை ஏற்றுக்கொள்வதே மெய் சீஷத்துவமாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் சீடர்கள், இயேசுவிடம் வந்து அவரது பாதத்திலிருந்து பலவற்றை விசாரித்து அறிந்து கொண்டனர். சீஷர்கள் இயேசுவிடம், உவமையின் பொருள் (மாற். 7:17; லூக். 8:9) இன்னதென்று கற்றுக் கொண்டனர். ஜெபம் செய்வது எப்படி என கற்றுக் கொண்டனர் (லூக்கா 11:1) அவ்வாறே இயேசுவும் சீஷர்கள் கர்த்தத்துவத்தின் மெய்ப்பொருளை அறிய உற்சாகப்படுத்தினார். தமக்கு அன்பாயிருந்த சீடனை தமது மார்பில் சாய இடமளித்தார் (லூக்.22:11). அதாவது தேவன் தம்மை அறிந்துகொள்ள தம்முடைய சீஷர்களுக்கு வாய்ப்பளித்தார்.

அதனால்தான் "சீமோன் பேதுரு இயேசுவின் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நான் பாவியான மனுஷன்" (லூக்கா 5:8) என கூறமுடிந்தது. "இயேசு இருந்த இடத்திற்கு வந்த மரியாள், அவரைக் கண்ட உடனே, அவர் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்க மாட்டான் என்றாள்." (யோவா-11:32) இப்படி அவர்கள் இயேசுவை அறிந்துகொள்வதினால், கர்த்தத்துவத்தை அறிந்து மெய்ப்பொருளை பற்றிக்கொள்ள கூடியதாக இருந்தது.

### சீஷத்துவம், சுயத்திற்கு மரித்ததாக இருக்கும்.

"இயேசுவின் விருப்பம் என்னவென்றால், நாம் நமது சுயத்திற்காக ஒவ்வொருநாளும் மரிக்கவேண்டும் என்பதாகும். இவ்வண்ணமாக நாம் கிறிஸ்துவைப் பின்பற்றி வாழ்வதால் மாத்திரமே ஒருவனுடைய ஜீவன் நித்தியத்தை சென்றடைய முடியும். இந்தச் சரியான தாற்பரியத்தை அறிந்துகொள்ள வேண்டும். அதாவது இங்கு இலாபமடைதலல்ல, மாறாக தேவ பக்திக்குரிய ஒன்றாய் சீஷத்துவம் இருக்கின்றது. நம் சுயம் மரித்து, கிறிஸ்து இயேசு எமக்குள் வாசம்பண்ணுவதை நாம் வெளிப்படுத்துகின்ற மக்களாக வாழவேண்டும்.

### கர்த்தத்துவத்திற்கு கீழ்ப்படியும் சீஷத்துவம்

சீஷர்கள் ஒருபோதும் குருவிலும் மேலான நபர்கள் அல்ல (லூக். 6:40) குருவாகிய கிறிஸ்துவுக்கு அவர்கள் அடிபணிந்து அவரை மாத்திரமே தமது தஞ்ச மெனக்கருதி அவர் சென்ற வழியில் அஞ்சாது பின்பற்றி செல்பவர்களே சீஷர்களாவார்கள். "தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதர ரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்கா விட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்." (லூக்.14: 26) "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்." (லூக் 14:27) "தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான்." (லூக்.14:33) என்றெல்லாம் எடுத்துரைத்து அவர்கள் கர்த்தத்துவத்தை அறிந்துகொள்ளும்படியாக வும் அவருக்காக பணிபுரியும்படியாகவும் இயேசு சீஷர்களுக்குக் கற்பித்தார்.

### சீஷத்துவம், கர்த்தத்துவத்திலே கனிகொடுக்கும்.

இயேசுவின் சீடர்கள் அவரில் நம்பிக்கை வைத்திருந்தனர். அவரது வார்த்தையில் நிலைகொண் டிருந்தனர். ஆகவேதான் அவர்கள் மிகுந்த கனிகொடுப் பவர்களாக மாறினார்கள் (யோவான் 15:8). இயேசுவை பின்பற்ற சீஷர்கள் ஆயத்தமான பின்னரே அவர்கள் கனிகொடுப்பவர்களாக மாறினார்கள். அவர்களை தம் சீஷத்துவத்தில் பயிற்றுவித்து, உற்சாகப்படுத்தி கட்டி யெழுப்பும் ஊழியத்தை இயேசு செய்ததினால் சீஷர்கள் கர்த்தத்துவத்தில் கனிகொடுப்பவர்களாக மாற்றப்பட் டார்கள். இந்த ஜனங்கள், இயேசுவை கனப்படுத்தியது போலவே அவருடைய சீஷர்களையும் மதித்தனர்.

சீஷர்கள் கர்த்தத்துவத்தில் கனிகொடுக்கும்படி யாகவே, இயேசுவானர் ஆயக்காரரும் பாவிகளோடும் கூட பந்தியிருந்தார் (லூக். 5:30) அப்படி அவர் செய்து பாவிகளை நேசித்து, அவர்களும் தேவனை அறிந்து கொள்ளத்தக்க வழியை, கர்த்தத்துவத்தை மக்களுக்கு வெளிப்படுத்தி அவர்களையும் சீஷராக்கி நேசித்ததை நற்செய்தி நூல்களிலே வாசிக்க காண்கிறோம்.

### சீஷத்துவம் என்பது கர்த்தரை பின்பற்றுவதாகும்.

"நாம் இயேசுவைப் பின்பற்றுவது என்பது எம்மு டைய தனிப்பட்ட ஆதாயத்திற்கானது அல்ல" அவர் நம்முடைய தேவன். நாம் அவரது சிருஷ்டிகள். ஆகவே நமது கீழ்ப்படிதலே முற்றிலும் பொருத்தமானதாகும். நாம் முரட்டாட்டம்பண்ணினால் எம்மீது தேவனுடைய கோபாக்கினையே வரும்." ஆகவே நாம் கிறிஸ்துவை எமது ஆண்டவர் என்ற நிச்சயத்துடன் தனிப்பட்ட லாப நோக்கத்தைத் தவிர்த்து அவரைப் பின்பற்றவேண்டும். கிறிஸ்துவுக்காக தன்னை வெறுக்கவும் வேண்டும். நாம் கிறிஸ்துவுக்காக மரிக்க ஆயத்தமுள்ளவர்களாக இருந் தால்தான், அவருடைய ராஜரீக கர்த்தத்துவத்தை ஏற்று அவரைப் பின்பற்றுகிறோம் என்பது அனைவருக்கும் முன் தெளிவாகும். சுயநலமற்ற மனதுடன் இயேசுவைப் பின்பற்றுபவனே சீஷன் என அழைக்கப்பட தகுதியுள்ள மனிதன். அவன் தனது சித்தத்தின்படியாக அல்ல, தேவனுடைய சித்தத்தின்படியாகவே செயற்படுவான். தேவனுடைய திருச்சித்தத்தைச் செய்பவன் எவனோ அவ்வனே கர்த்தத்துவத்தைப் பிரதிபலிக்கின்றான்.

### இயேசுவே ஆண்டவர் என சீஷத்துவம் அறிக்கை பண்ணும்.

"இயேசுவை ஆண்டவர்" என்று கூறுகிறவன் தேவனுக்கு சீஷனாக இருக்கிறான் (லூக்.12:8) ஒருவன் தேவனுக்கு சீஷனாக இருந்தால், தான் பெறும் சகல காரியங்களையும் தேவனிடமிருந்தே பெறுகின்றேன் என்பதை உணர்ந்தவனாக இருப்பான். அத்துடன் நம்மி டத்தில் இருக்கின்ற அனைத்து காரியங்களையும் நமது தேவனே தந்திருக்கிறார் என்ற சத்தியத்தை உணர்ந்து தேவன் நம்மைக் கவனிக்கிறார், பராமரிக்கிறார் என்ற நிச்சயத்தைப் பெற்றுக்கொண்டு அதை மற்றவர்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் பறைசாற்றுபவனாக வாழ்வான் (லூக்கா 12:24). ஆகவே நம்மிடத்தில் தேவன் தந்திருக்கின்ற அனைத்து காரியங்களும் மற்றவர்களின் நலனுக்குரியவைகளாக இருக்கின்றது என்பதை ஒவ்வொரு சீஷர்களும் புரிந்து கொள்வார்கள். நாம் செய்கின்ற அனைத்து காரியங்களின் ஊடாகவே கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாக நாம் மாறுகின்றோம். அதுவே சீஷத்துவத்தின் சிறந்த முன்மாதிரியாக இருக்கின்றது.

### *சீஷத்துவம் என்பது ஜீவனைக் கொடுப்பதாகும்.*

"இயேசுவுக்காக எவனொருவன் தன்னுடைய சொந்த ஜீவனைக்கொடுக்க முன்வருகிறானோ, அவன் இவ்வுலகத்தின் எந்த ஆதாயத்தையும் எதிர்பார்ப்பவன் அல்ல". "தனது ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாக தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்." (லூக்-9:24) என்று இயேசு கூறிய கருத்து இதுதான். சீஷத்துவம் என்பது இயேசுவைப் பின்பற்றுவது மாத்திரமல்ல, அவருக்காக எம்மையே நாம் நஷடப்படுத்திக் கொள்வதாகவும் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதாகவும் அவரை நன்கறிந்துகொள்வதாகவும் இருக்கிறது.

### *சீஷத்துவம் கர்த்தத்துவத்தை பிரசங்கிக்கும்.*

"அவர்கள் புறப்பட்டுப்போய், கிராமங்கள் தோறும் திரிந்து, எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பிணியாளிகளைக் குணமாக்கினார்கள்" (லூக்.9:6) எனவும் "இயேசு எங்கும் சுற்றி நடந்து, ஜெபஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து" (மத்தேயு 4:23) எனவும் "அந்நாட்களில் இயேசு தேவாலயத்திலே ஜனங்களுக்கு உபதேசித்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது"(லூக்.20:1) எனவும் வாசிப்பதிலிருந்து சீஷத்துவம் என்பது கர்த்தத்துவத்தைப் பிரசங்கிக்கின்றதொன்றாக இருப்பது தெளிவு. நாம் கர்த்தரை பிரசங்கிக்கவேண்டும். நாம் கர்த்தத்துவத்தைப் பிரசங்கிக்கும்போது கிறிஸ்துவுக்குச் சீஷர்களாக இருப்போம். "அன்றியும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை மனுஷகுமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கைபண்ணுவார்" (லூக்.12:8) என்றார் இயேசு உறுதியுடன். "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்." (1யோவா.4:15) என யோவானும் உறுதிப்படக் கூறுகிறார். ஆகவே சீஷன் என்பவன் கர்த்தத்துவத்தை தான் இருக்குமிடமெங்கும் சென்று அதைப் பிரசங்கித்து அவருடைய நாமத்தினாலே அற்புதங்களைச் செய்து இராஜ்யத்தின் சுவிசேஷத்தை பறைசாற்றுபவனாக இருப்பான்.

கடைசியாக, "ஆண்டவரே நாம் யாரிடத்தில் போவோம்? நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்" (யோவான் 6:68) என சீமோன் பேதுரு அறிக்கையிட்டான். அவ்வாறு கர்த்தராகிய இயேசுவை நாமும் அறிந்துகொண்டு அவரது கர்த்தத்துவத்தை ஏற்றுக்கொண்டு "எனது இரட்சகராகிய மேசியா" அவர் தான் என்பதை அறிக்கையிடுவோம். அத்துடன் நின்றுவிடாமல், இயேசு சீஷர்களை நேசித்ததுபோலவே நாமும் மக்களை நேசித்து இயேசுவை பின்பற்றுவோம்.

நாம் கிறிஸ்துவை பின்பற்றும்போது மற்றவர்களும் இயேசுவைப் பின்பற்றத்தக்க நல்ல சாட்சியான ஜீவியத்தைப் பேணுவோம். இந்தக் கிறிஸ்மஸ் நாட்களிலும் மெய்யான சீஷத்துவத்தின் நிரூபணமாக நாம் இருக்கின்றோமா என்பதைச் சிந்தித்துப் பார்ப்போமா. ❑

## சுவிஷேசத்தை அறிவிப்பது நமது கடமை



"உலகமெங்கும் போய் சுவிஷேசத்தை அறிவியுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பரமேறிச் சென்ற நமதாண்டவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஒருவருக்காவது சுவிஷேசத்தை அறிவிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். ஆகவே இக் கடைசி காலத்தில் வாழ்கின்ற நாம் நமது நேரத்தை ஆண்டவருக்கென்று செலவழிப்போமா?

"தேவன் அன்பாகவே இருக்கிறார்", "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்" என்று கிறிஸ்துவை அறியாதோருக்கு தெரிவித்து அவரிடத்தில் நாம் பெற்ற ஆசீர்வாதங்களை பகிர்ந்துகொள்வோமா?

எத்தனையோ மிஷனரிகள் தங்கள் உயிரையும் பாராது ஆதிவாசிகளுக்கு இயேசுவைப் பற்றி தெரியாத மக்களுக்கு, மலை, காடு, பனி, வெயில், மழை எனப் பாராது ஆண்டவராகிய இயேசுவை பற்றிய நற்செய்தியை அறிவித்து இரத்தச் சாட்சிகளாகவும் மரிக்க அஞ்சாது சுவிஷேசத்தைச் சுமந்து சென்றனரே. நாமும் அவர்களைப்போல காடு மலை என்றெல்லாம் சென்று சுவிஷேசத்தை அறிவிக்காவிட்டாலும்கூட நாம் இருக்கும் இடத்திலே, சபையில், அல்லது நமது வீட்டண்டையில் வசிக்கின்றவர்கள் மத்தியில் அல்லது நமது சமுதாயத்தில் இப்பணியை நிறைவேற்றலாமே. இதுதான் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கின்ற தரிசனம். இதை நிறைவேற்ற இன்றே முயற்சிப்போமா?

சகோ. ஆர். அருமைராஜ், மதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்களை எண்ணும் அறிவு

- நீரியஸ் பெர்னாண்டோ -



கடவுள் நம்மிடம் வந்து ஒவ்வொரு நாள் தொடங்கும்போதும் உனக்கு தினமும் 86,400 ரூபாய் தருகின்றேன். ஆனால் அதை வீணாக செலவழிக்கக் கூடாது. அதை மிச்சம்பிடித்து மறுநாளில் பயன்படுத்தவோ சேமிக்கவோ முடியாது. ஏனெனில் அந்தநாளின் இறுதியில் செலவளிக்காத பணம் வீணாகிவிடும் எனவும் அதேவேளை, அதிலிருந்து மற்றவர்களுக்கு ஒருசதமும் கடன்கொடுக்கவோ மற்றவர்களிடம் கடன் வாங்கவோ முடியாது எனவும் கூறினால் அதை எப்படி செலவு செய்வீர்கள். நிச்சயமாகவே ஒவ்வொரு ரூபாவையும் மிகுந்த கவனத்துடன் செலவு செய்வீர்கள் அல்லவா? அதுபோலத்தான் கடவுள் நம் அனைவருக்கும் தினமும் 86,400 வினாடிகளை கிருபையாக தருகிறார் ஆனால் அதை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதைக் குறித்து எப்போதாவது எண்ணிப் பார்த்ததுண்டா? அவசரமான உலகத்திலே பரபரப்போடு வாழும் நாம் ஆண்டின் இறுதியில் சற்று அமர்ந்திருந்து நாம் கடந்து வந்த வருடத்தை எப்படி கழித்தோம் என எண்ணிப் பார்ப்பது நமக்கு நன்மை பயக்கும்.

பரிசுத்த வேதாகமத்திலே 90ம் சங்கீதத்தில் தேவ மனுஷனாகிய மோசே அர்த்தமுள்ள ஒரு ஜெபத்தை ஏறெடுக்கின்றார். 12ம் வசனத்தில் "நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்" என்பதாக வேண்டுகிறார். ஆம் இதில் "நாட்களை எண்ணும் அறிவு" என்று சொன்னால் என்ன? கலண்டருக்கு முன்பாக நின்று அதில் எத்தனை நாட்கள் உள்ளன என எண்ணுவதா? இல்லை. நம்முடைய இந்த உலக வாழ்க்கை எவ்வளவு குறுகியது என்பதை அறிந்து உணர்ந்து, அதை ஞானத்துடன், அர்த்தமுள்ளவிதத்தில் கழிப்பதுதான் நாட்களை எண்ணும் அறிவாகும். ஆகவே மோசே மனித வாழ்க்கையை எப்படியாக நோக்கினார் என்பதை குறித்து சற்று சிந்திப்போமாக.

**மனித வாழ்க்கையின் தன்மை**

90ம் சங்கீதத்தில் 3 முதல் 9வரையுள்ள வசனங்களில் மோசே, "மனித வாழ்வானது" எத்தனை குறுகியது, நிலையற்றது என்பதை விளக்குகின்றார். அதில் 5 விதமான காரியங்களை இனி கவனிப்போம்.

**1. நிர்த்தூளி** (வசனம் 3) "நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர்" பொதுவாக தற்காலத்தில் நமது பேச்சு வழக்கிலே நிர்த்தூளி என்ற வார்த்தையை நாம் உபயோகிப்பது குறைவு. ஆனால் புதிய மொழிபெயர்ப்பிலே இந்த சொல் புழுதி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆம், கடவுள் மனிதனை மண்ணிலிருந்து அதாவது புழுதியிலிருந்தே உண்டாக்கினார் என்பதாக ஆதியாகமம் 2:7ல் வாசிக்கிறோம் ஆனால் மனிதன் பாவம்செய்து சாபத்துக்குள்ளானபோது கடவுள் மனிதனை நோக்கி "நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்" என்று ஆதி 3:19ல் கூறுகின்றார். ஆம் நாம் வாழும் இந்த சரீர வாழ்வானது மண்ணுக்கு ஒப்பானது. ஒருநாளில் இது அழிந்து மண்ணோடு மண்ணாகப் போகின்றது. இந்த மண்ணாகிய சரீரத்தை அழகுபடுத்தவும், அதைத் திருப்திப்படுத்தவும் மனிதன் என்னவெல்லாம் செய்கின்றான். எவ்வளவாய் பணத்தையும் நேரத்தையும் செலவு செய்கிறான் என்பது சொல்லாமலே தெரிந்திருக்கும். ஆனால் கடவுள் தந்த நம்முடைய அழியாத ஆத்துமாவைக் காத்துக்கொள்ள நாம் எந்தளவு முயற்சியை எடுக்கின்றோம் என்பதைச் சிந்திப்பது நல்லது.

**2. வெள்ளம்** (வசனம் 5) "அவர்களை வெள்ளம் போல் வாரிக்கொண்டு போகிறீர்" ஆற்றிலே வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது அது கரையிலுள்ள மரம் செடி கொடிகளை எப்படியாக வேகமாக வாரிக்கொண்டு போகும் என்பது நமக்கு தெரியும். அதுபோல இவ் வாழ்க்கையும் வேகமாய் கடந்துபோகிறது. ஒருவர் இப்படியாகச் சொன்னார் "வாழ்க்கை என்பது ஒரு நூல் பந்துபோல, அது முடியும்போது வேகமாக சுழல ஆரம்பிக்கும்" ஆம் வயதுபோகபோக நமது நாட்கள் சீக்கிரமாய் ஓடுவதுபோல இருக்கும். அதைத்தான் யோபு 7:6ல் "என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது" என்பதாக யோபு கூறுகின்றார். எனவே வெள்ளம்போல வேகமாய் ஓடும் இந்த மனித வாழ்க்கையின் வேகத்தை யாராலும் குறைக்கவோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தவோ முடியாது. இப்படியாக வேகமாய் ஓடும் இந்த வாழ்க்கையில் நாம் பணத்துக்காகவா? பதவிக்காகவா? புகழுக்காகவா? நாம் எதற்காக ஓடிக்கொண்டிருக்கிறோம்? எதனை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம்? எப்படிப்பட்டவர்க ளாக நாம் ஓடுகிறோம் என்று அமர்ந்திருந்து நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

**3. நித்திரை** (வசனம் 5) "நித்திரைக்கு ஒத்திருக்கி றார்கள்? பொதுவாக மனிதர்கள் வாழ்வதற்காகத்தான் தூங்குவார்களே ஒழிய யாருமே தூங்குவதற்காக வாழ் வதில்லை. எனவே வாழ்வில் நித்திரை இரண்டாந்தர மானது. அதேபோல நமது நித்திய வாழ்வோடு ஒப்பி டும்போது இந்த உலக வாழ்வானது இரண்டாந்தரமா னது, முக்கியமற்றது என்பதை விளக்க மோசே மனித வாழ்வை நித்திரைக்கு ஒப்பிட்டு கூறுகின்றார்.

அருமையானவர்களே நமது வாழ்விலே முக்கி யத்துவம் வாய்ந்தவைகளும் உண்டு, முக்கியமற்றவை களும் உண்டு. நாம் தெரிந்தெடுப்புகளை எதனை அடிப்படையாகக்கொண்டு தெரிவுசெய்கிறோம் என்பது முக்கியமானது. இதை சொல்லும்போது ஒரு கதை என் நினைவுக்கு வருகிறது. ஒருமுறை சிறுபையன் ஒருவன் அலங்காரப் பொருட்கள் விற்கும் கடைக்குச் சென்று, விளையாட்டாக அங்கு பொருட்களில் எழுதி தொங்க விடப்பட்டிருந்த விலை அட்டைகளைக் கழற்றி வேறு பொருளில் மாற்றி வைத்துவிட்டான். இப்படியாக அங்கி ருந்த அநேக பொருட்களின் விலைகளிலே மாற்றங்க ளைச் செய்துவைக்க, மறுநாளில் அந்தக் கடைக்கு பொருட்கள் வாங்கவந்த மக்களுக்கு ஒரு பெரும் ஆச்சரியம் காத்திருந்தது. அங்கு பெறுமதி கூடிய பொருட்களில் குறைந்த விலையும், பெறுமதி குறைந்த பொருட்களில் கூடுதலான விலையும் தொங்கவிடப் பட்டிருந்தது.

பிரியமானவர்களே இப்படித்தான் சாத்தானும், மனித வாழ்விலே பெறுமதியற்ற முக்கியமற்ற காரியங் களை முக்கியமானதாகவும் முக்கியத்துவமான காரிய ங்களை முக்கியமற்றதாகவும் காட்டி மனிதர்களை வஞ்சிக்கிறான். ஆகவே நாம் வாழும் இந்த குறுகிய வாழ்நாளிலே முக்கியமானது எது? முக்கியமற்றது எது? நித்தியமானது எது? நித்தியமற்றது எது? என்பதை உணர்ந்து, நாம் ஞானமுள்ளவர்களாய் ஜீவிக்க ஆண்டவரிடம் கேட்கவேண்டும்.

**4. புல்** (வசனம் 5, 6) "காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அது காலையிலே முளைத்துப் பூத்து, மாலையிலே அறுப்புண்டு உலர்ந்து போம். என்பதாக மோசே இங்கே குறிப்பிடுகிறார். இதை விளக்கும் "ஓ மனிதனே நீ எங்கே போகிறாய்? காலையில் மலர்ந்து மாலையில் மறையும் மலராய் வாழ்கிறாய்" என்ற ஓர் அருமையான பாடலும் உண்டு.

பிரியமானவர்களே, இந்த பூமியிலே நமது வாழ்நாட்கள் 70 வருஷமாகவோ அல்லது 80 வருஷமாகவோ இருக்கலாம் ஆனால் கடவுளின் பார்வையில் அது காலையில் பூத்து மாலையில் மறையும் புல்லுக்கு ஒப்பாகவே காணப்படுகிறது. இந்த குறுகிய நாட்களை நாம் எப்படி செலவழிக்கின்றோம் என்பது மிக முக்கியமானது. உதாரணத்திற்கு கடவுள் உங்களிடம் வந்து நீங்கள் வாழப்போவது இன்னும் 24 மணிநேரம் மட்டுமே என்று சொன்னால் நீங்கள் என்ன செய்வீர்கள். ஆம் நிச்சயமாகவே ஒரு வினாடியைத் தானும் வீணாக்காது, மிகக் கவனமாய் அதைச் செல வழிப்போமல்லவா? இதைத் தான் பவுலும் எபேசியர் 5:16ம் வசனத்தில் "நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள்" என்பதாக எழுதுகின்றார்.

**5. கதை** (வசனம் 9) "ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம்" வாழ்க்கையிலே நாம் எத்தனை கதைகளைக் கேட்டிருக்கிறோம். குறிப் பாக இந்நாட்களில் தொலைகாட்சியில் ஒருநாளில் ஒன்றுமாறி இன்னொன்று என பல தொடர்கதைகளைப் பார்ப்பவர்கள் உண்டு ஆனால் சிலவருடங்கள் கழித்து அவர்களிடம்போய் நீங்கள் பார்த்த கதையைச் சொல் லுங்கள் என்று கேட்டால் அதை மறந்துவிட்டிருப்பார் கள். அப்படியென்றால் அவர்கள் பார்த்த கதையினால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை. அதில் ஒரு அர்த்தமும் இல்லை என்பதுதான் அதின் பொருள். அதேபோல வாழ்க்கையையும் அர்த்தமில்லாமல் ஒரு கதையைப்போல கழித்துபோடுவோமென்றால் அதினால் என்ன பிரயோஜனம். இதை தான் பிரசங்கி 1:14ல் "சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களை யெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது" என்று குறிப்பிடுகிறார். ஆம், கடவுளுக்கு முதலிடம் கொடுக் காத வாழ்க்கை அர்த்தமற்றதும் வெறும் மாயையுமான வாழ்வாகும்.

**மனித வாழ்வின் நம்பிக்கை**

நிலையற்ற இந்த மனித வாழ்விலே பாடுகள், வேதனைகள் இல்லாத மனிதர்களே இல்லை. எல்லா மனிதருக்கும் ஏதோ ஒரு வேதனை இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் மனித வாழ்வுக்கு அர்த்தத்தை கொண்டுவரும் ஆண்டவரை நாம் தனிப்பட்ட விதத்தில் அறிந்துகொள்ளும்போது வாழ்க்கையிலே நமக்கு அவர் நம்பிக்கையைத் தருகிறார். ஆகவேதான் மேசே "ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர்? (வசனம் 1) என அறிக்கையிடுகிறார். ஆம், இந்த உலகத்திலே மனிதன் அடைக்கலம் தேடி பாதுகாப்புக்காக பல காரியங்களை நாடித் தேடினாலும், இந்த உலகிலே எதுவுமே நமக்கு நிலையான பாதுகாப்பைத் தரமுடியாது. நமக்குள்ள ஒரே மெய்யான பாதுகாப்பு நமது ஆண்டவர் மாத்தி ரமே. இதை உணர்ந்துகொள்ளும்போது வாழ்க்கை அர்த்தம் பெறுகிறது நமக்கு மெய்யான நம்பிக்கை கிடைக்கிறது.

இரண்டாம் வசனத்தில், "சகலத்தையும் சிருஷ்டித்த அவரே அநாதியாய் என்றென்றைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவனாய் இருக்கிறார்" என்று குறிப்பிடுகிறார். ஆம், நாம் அடைக்கலமாகக்கொண்டிருக்கும் நம் ஆண்டவர் எங்கோ அணுகமுடியாத தூரத்தில் இருக்கும் ஒருவர் அல்ல. மாறாக அவரே சகலத்தையும் ஆளுகிறவர். எனவே நமது வாழ்க்கை அவரது கரத்திலே பாதுகாப் பாய் இருக்கிறது என்பதை அறிந்திருக்கவேண்டும். வரும் புதிய ஆண்டு நமக்கு எப்படியிருக்குமோ என கலங்கும்போது யோபு சொன்ன நம்பிக்கையின் வார்த்தைகளை நாமும் சொல்வோம். "நான் போகும் வழியை அவர் அறிவார்" (யோபு 23:10).

**மனித வாழ்வின் எதிர்பார்ப்பு**

பொதுவாக மனிதர் சிறுபிள்ளைகளாயிருக்கும் போது தமது சிறுபிராயத்தைக்குறித்து சலிப்படைந்து விரைவில் பெரியவர்களாகிவிட துடிக்கிறார்கள். ஆனால் பெரியவர்களானதும் மீண்டும் சிறியவர்களாக விரும்புகி றார்கள். அதேபோல பணம் சம்பாதிக்க தமது உடல் நலத்தையும் கவனியாது இரவுபகல் என பாடுபட்டு உழைக்கிறார்கள். ஆனால் வாழ்வின் இறுதிக்காலத் தில் தாம் இழந்துபோன உடல்நலத்தைத் திரும்பப்பெற உழைத்த பணத்தையெல்லாம் செலவழிக்கிறார்கள். அதுமட்டுமன்றி அவர்கள் எப்போது பார்த்தாலும் எதிர்காலத்தைக் குறித்தும், தம்மிடம் இல்லாததைக் குறித்தும் ஏங்குவதால் அவர்கள் நிகழ்காலத்தில் உள்ள நன்மைகளில் சந்தோஷப்பட்டு திருப்தியடை வதே இல்லை. இதுதான் மனித வாழ்வின் ஏக்கமாய் இருக்கிறது. ஆனால் மோசே தன்னுடைய ஜெபத்தில் "தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக்கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்" (சங்கீதம் 90:15) என ஒரு அர்த்தமுள்ள ஜெபத்தை முன்னெடுக்கிறார்.

மனிதன் எதை செய்தாலும் அதற்கு ஒரு நோக்கம் அல்லது ஒரு காரணம் இருக்கும். நோக்கம் இல்லாமல் நாம் எதையும் செய்வதே இல்லை. அவ்வாறாக மனிதனுடைய அடிப்படையான நோக்கம் என்ன என்று பார்ப்போமானால், மனிதன் தன் மகிழ்ச்சிக் காகவே எதையும் செய்கிறான். நாம் மகிழ்ச்சியாயி ருப்பது தவறல்ல. ஆனால் தவறான காரியங்களில் நாம் மகிழ்ச்சியடையமுடியாது. ஏனெனில் கடவுள் மனிதனை படைத்தபோது அவன் தன்னிலும் தன் படைப்புகளிலும் திருப்திகொண்டு மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாயிருந்தது. ஆனால் பாவத்தால் மகிழ்ச்சியை இழந்த மனிதன் மீண்டும் அம் மகிழ்ச்சியை பெற்றுக்கொள்ளவே இன்று படாதபாடுபடுகின்றான். பணத்தை சம்பாதிப்பதினால், வாய்க்கு உருசியான உணவு வகைகளினால் தன் வயிற்றை நிரப்பிக்கொள்வதினால், விதவிதமாய் ஆடை ஆபரணங்களை வாங்கி அணிந்துகொள்வதினால், புதிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதினால், வீட்டை பலவிதமான நவீன சாதனங்களினால் நிரப்புவதினால், ஏதாவது ஒன்றை சாதித்து பெருமைகொள்வதினால் என இப்படியாக எவ்விதத்திலாவது மகிழ்ச்சியை கண்டு கொள்ளவே கடும்பிரயாசப்படுகிறான். ஆனால் நம்மு டைய மெய்யான மகிழ்ச்சி நம்முடைய ஆண்டவரிடமி


முதன் முறையாக சத்தியவசனம் மூலமாக வெளிவந்திருக்கும்

**சில சம்பவங்களில் சில சத்தியங்கள்**

சபை நிகழ்வுகளில், குடும்ப வாலிபர் முகாம்களில் பயன்படுத்தக்கூடிய

15 நாடகங்களும் சிந்தனைத் துளிகளும் அடங்கிய

இறுவட்டு விலை ரூபா 200.00 மாத்திரமே!

நேரில் பெற்றுக்கொள்ளலாம்:

**Back to the bible Bookshop**

120,A தர்மபால மாவத்தை, கொழும்பு 7.

தொலைபேசி : **011 2687040**


ருந்து நமக்குக் கிடைக்கின்றது என்பதை மறந்து விடுகிறான்.

இதை இன்னும் ஒருபடி ஆழமாய் விளக்க ஒரு சிறு உதாரணத்தை கூறி முடிக்க விரும்புகிறேன். ஒரு அரசனுக்கு 4 மனைவியர் இருந்தார்கள். அவன் தனது 4வது மனைவியை எல்லாரிலும் அதிகம் நேசித்தான். அவளுக்கு உடுக்க சிறந்த உடைகளையும், உண்ண சுவையான உணவையும் வாங்கிக்கொடுப்பானாம். இப்படியாக அவளில் அதிகமாக கரிசனைகொண்டு நேசித்தான். அதுபோல அவன் தனது 3வது மனைவி யையும் நேசித்தான். அவளது அழகைக் குறித்து அடிக்கடி பெருமைப்பட்டுக் கொள்வான். ஒருவேளை அவள் தன்னை விட்டு போய்விடுவாளோ என்ற பயமும் அவனுக்குள்ளே இருந்தது. அவ்வாறே அவன் தனது 2வது மனைவியையும் அன்பு செலுத்தினான். அவள் அவனுக்கு பெரும் ஆறுதலாக இருந்தாள். அவன் கவலையோடும் மனக் கலக்கத்தோடும் இருக்கும் நேரங்களில் இந்த இரண்டாவது மனைவியிடம் சென்று ஆறுதலையும் ஆலோசனையும் பெற்றுக்கொள்வான். ஆனால் அவனது முதல் மனைவியோ அவனுக்கு மிகவும் உண்மையுள்ள மனைவியாக, அவனுடைய வாழ்க்கையைக் குறித்த கரிசனையுள்ள ஒரு மனைவி யாக இருந்தாள். ஆனால் அவனோ அவளைக்குறித்து சற்றும் அக்கறை அற்றவனாக, அவள் இருப்பதையே மறந்தவனாக வாழ்ந்து வந்தான்.

ஒருநாள் அரசன் அதிகமான நோய்வாய்பட்டு இறக்கும் நிலையில் தனது 4வது மனைவியை அழைத்து, "நான் இன்னும் சில நாட்களில் சாகப்போகி றேன், நான் உனக்கு விலை உயர்ந்த உடைகளையும் ருசியான உணவுவகைகளையும் வாங்கித் தந்தேனே, என்னுடைய சாவிலும் நீ என்னோடு வருவாயா?" என்று கேட்டானாம். அதற்கு அவள் முடியாது என மறுத்து விட்டாள். உடனே அவன் தனது 3வது மனைவியை அழைத்து, "உன்னை நான் எவ்வளவாய் நேசித்தேன் என்பதும் உன்னைக்குறித்து நான் எவ்வளவாய் பெருமைப்பட்டேன் என்பதும் உனக்குத் தெரியும் சரி, நீயாவது என்னோடு வருவாயா?" என்று கேட்க அவளும் முடியாது என்று மறுத்துவிட்டாள். இறுதியாக 2வது மனைவியை அழைத்து "வாழ்விலே நீ எனக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவோ ஆறுதலாய் இருந்தாயே, அதுபோல என் சாவிலும் நீ என்னோடு வருவாயா?" என்று கேட்க, அவளோ "இல்லை என்னால் முடியாது, வேண்டுமானால் கல்லறை மட்டும் வருகிறேன். அதற்குமேல் என்னால் வரமுடியாது" என மறுத்துவிட்டாள்.

அப்பொழுது "நான் வருகிறேன்" என சத்தம் கேட்டது. உடனே அரசன் சத்தம் வந்த திசையை நோக்கி தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, அங்கே அவனுடைய முதல் மனைவி கதவோரமாய் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். "யார் வராவிட்டாலும் உங்களோடு நான் எங்கு வேண்டுமானாலும் வரத் தயாராய் இருக்கிறேன்" என்று சொன்னாள். அவன் அவளைக் கூர்ந்து கவனித்தான். அவள் சரியான உணவு இன்றி மெலிந்து வாடிப்போய் காணப்பட்டாள். அரசன் தன் மனதுக்குள் "ஐயோ இவளை அல்லவா என் வாழ்நாளில் அதிகமாய் கரிசனைக்கொண்டு நான் கவனித்திருக்கவேண்டும். தவறுசெய்துவிட்டேனே" என எண்ணி வருந்தினான்.

அருமையானவர்களே, இந்தக் கதை நமக்கு ஒரு அருமையான பாடத்தைக் கற்றுத்தருகிறது. இதில் வரும் 4வது மனைவி நமது உடலை குறிக்கிறது. இந்த உடலுக்கு உடுக்க சிறந்த உடைகளையும், உண்ண சுவையான உணவையும் கொடுக்கிறோம். ஆனால் மரணத்தின் பின் இந்த உடல் நம்மோடு வரப்போவதில்லை. அடுத்ததாக 3வது மனைவி நமது வீடு வாசல் சொத்து சுகங்களை குறிக்கிறது. இவைகளைக்குறித்து அடிக்கடி பெருமைபட்டுக் கொள்கிறோம். சிலவேளைகளில் இவை நம்மைவிட்டு போய்விடுமோ என எண்ணி பயப்படுகிறோம். ஆனால் இதுவும் மரணத்தின் பின் நம்மோடு வரப்போவதில்லை. அடுத்ததாக, இரண்டாவது மனைவி நமது உறவுகளைக் குறிக்கிறது. அவர்கள் நமக்குப் பெரும் ஆறுதலாகவும், நாம் கவலையோடும் மனக் கலக்கத்தோடும் இருக்கும் நேரங்களில் அவர்கள் நமக்கு ஆறுதலையும் ஆலோசனைகளையும் தரக்கூடும். ஆனால் மரணத்தின் பின் அவர்கள் கல்லறை வரைமட்டுமே வரப்போகிறார்கள். இறுதியாக முதல் மனைவி நமது ஆத்துமாவைக் குறிக்கின்றது. அநேக நேரங்களில் இதைக்குறித்து சற்றும் அக்கறையற்றவர்களாக, அப்படி ஒன்று நமக்குள் இருப்பதையே மறந்து வாழ்கிறவர்களாக நாம் இருப்பதுண்டு. ஆனால் மரணத்தின் பின் நம்மோடு வரப்போவது நமது ஆத்துமா மாத்திரமே. அதை நாம் எந்தளவு அக்கறைகொண்டு, கரிசனையோடு பராமரித்து பாதுகாத்திருக்கிறோம் என நம்மை நாமே ஆராய்ந்து மனந்திரும்பியவர்களாக, ஆண்டவரின் கிருபை வேண்டி மன்றாடுவோமாக.

கடந்துவந்த வருடத்தின் உங்கள் துக்கமும் துயரமும் மாறி, இனி வரும் நாட்கள் ஆண்டவருக்குள் மகிழ்ச்சி நிறைந்த நாட்களாய் அமைய வாழ்த்துகின்றேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ❑


# சத்தியவசன வானொலி நிகழ்ச்சிகள்

திங்கள் செவ்வாய் தினங்களில்
காலை 7:15 க்கு **FEBA**
49 மீற்றர் சிற்றலைவரிசையில்
**சத்தியவசனம்**

தினமும் காலை 5:40 க்கு
வெற்றி **F.M** ல்
**தெய்வீக நற்சிந்தனைகள்**

ஞாயிறு முதல் வெள்ளி வரை
தினமும் மாலை 6.30 மணிக்கு
கந்துரட்ட **F.M** ல்
**வசந்தமலர்கள்**

ஞாயிறுதோறும்
மாலை 5:30 மணிக்கு
இலங்கை வர்த்தக சேவையில்
**தீபம்**




தினமும் கனடா நேரப்படி
காலை 6:55க்கு
**Toronto Tamil Radio** வில்
**கிறிஸ்தவ நற்சிந்தனைகள்**

தினமும் கனடா நேரப்படி
சனிக்கிழமை காலை 9.30
மணிக்கு, மற்றும்
ஞாயிறு காலை 6.00 மணிக்கு
**www.wavesofpower.com**
இணையத்தளத்திலும்
நிகழ்ச்சிகளை செவிமடுக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேசிப்பவர்

## "தேவன் அன்பாகவே இருக்கிறார்"

## (1யோவான் 4:8)

சாரதாவின் பாடசாலையில் படிக்கும் ஒரு பெண்ணின் முகத்தில் ஒரு பயங்கர வடு. அவளுடைய அந்த அருவருப்பான தோற்றத்தினால் யாருமே அவளை நேசிப்பதில்லை. பழகுவதும் இல்லை. ஆனால் ஒவ்வொருநாளும் அவளை பாடசாலைக்கு கொண்டுவந்து விட்டுச் செல்லும் அவளுடைய தாயார் பாடசாலை வாசலில் வைத்து, அவளை கட்டி அணைத்து, அவளுடைய முகத்தில் முத்தம் கொடுத்து விட்டுப்போவதை ஒவ்வொரு நாளும் அவளோடு படிக்கும் சாரதா கவனித்துக் கொண்டிருப்பாள்.

ஆம், பொதுவாக நல்ல நேர்த்தியான தோற்றம் இல்லாத, அல்லது தமது குணத்திலே கெட்ட மனிதர்களை யாருமே நேசிக்க மாட்டார்கள். ஆனால் நம் தேவன் அந்த தாயைப் போல எல்லோரையும் நேசிக்கிறவராய் இருக்கிறார். வேதவசனம் சொல்கிறது, "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று. அவர் தன்னுடைய அன்பை எவ்விதமாகக் காண்பித்தார் தெரியுமா? ஆம், தம்முடைய குமாரனாகிய இயேசுவை, எம்முடைய பாவங்களுக்காக மரிக்கும்படியாய் இந்த உலகத்திற்கு அனுப்பியதன் மூலமாக! அதுமாத்திரமல்ல, "தேவன் இவ்வுலகத்தில் அன்புகூர்ந்தார்" என்று வேதம் கூறுகிறது. அப்படியென்றால் என்ன அர்த்தம்? அது இந்த உலகில் பிறந்த ஒவ்வொருவரையும், இனிமேல் வந்து பிறக்கப்போகின்ற ஒவ்வொருவரையும் குறிக்கின்றது.

"தேவன் இவ்வுலகத்தில் அன்புகூர்ந்தபடியால் இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார் மரிப்பதற்காக" என்று வேதவசனம் கூறுகின்றது. இன்னுமொரு இடத்தில் பாவங்களிலிருந்து விடுவிப்பதற்காக, இயேசு எல்லா மனிதருக்காகவும் மரித்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆம், இயேசுசுவாமி எல்லோரையும் நேசிக்கிறார். அவர்கள் யாராயிருந்தாலும் எப்படிப்பட்ட நிலையிலிருந்தாலும் பரவாயில்லை. அவர்களுடைய பாவங்களைத்தான் அவர் வெறுக்கிறார்.

தேவனுடைய அன்பு எல்லோருக்கும் உரியது. அவருடைய அன்பைப் பெறுவதற்கு நாம் பணக்காரராக ஆக வேண்டியதில்லை. பாவம் இல்லாதவர்களைத்தான் அவர் நேசிப்பார் என்று நாம் எண்ணவும் வேண்டியதில்லை. நாம் செய்யவேண்டியதெல்லாம் எமது பாவங்களுக்காக மனம்வருந்தி, மன்னிப்பு கேட்டு, அவரை நம்ப வேண்டியதுதான். தேவன் அன்புள்ளவராக இருக்கிறார். அவரை நோக்கி இப்போதே முழங்கால் படியிட்டு இந்த ஜெபத்தை ஜெபியுங்கள்.

"அன்பின் ஆண்டவரே, உம்முடைய
அன்பினை நான் மறந்துவிடாமல்
மற்றவர்களுக்கு உமது அன்பினை
வெளிக்காட்டும் நல்ல இருதயத்தை
எனக்குத் தந்தருளும். ஆமென்." ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள். இவைகளில் ஒன்றும் குறையாது.**

அன்பு சிறார்களே,
இப்படத்தை
அழகிய வர்ணத்தால்
நிறந்தீட்டி
மகிழ்வதோடு
நின்றுவிடாமல்,
*'கர்த்தருடைய வார்த்தை'* என்ற
தலைப்பில் உங்கள்
கவிதை, கதை,
துணுக்குகளை
எமக்கு எழுதி
அனுப்பிவையுங்கள்.
18வயதிற்குட்பட்ட
சிறார்களின் தரமிக்க
தகுதியான அழகிய
ஆக்கங்களுக்கு
பரிசு அனுப்பி
வைக்கப்படும்.

உங்கள் அழகிய
ஆக்கங்களை
<u>2010 ஜனவரி 31ம்</u>
திகதிக்குமுன்
அனுப்பிவைக்க
வேண்டிய முகவரி:

**சிறுவர் சோலை**
**தபால்பெட்டி 1012**
**கொழும்பு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த சஞ்சிகையின் சிறுவர் சோலைப் பகுதிக்கு**
**தமது முத்தான ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்பிய சிறார்களின் பெயர்கள் :**

1. பாலா அபிராமி - தியத்தலாவை.
2. கோபாலன் ஜோய்சி - களுவாஞ்சிகுடி.
3. மகாலிங்கம் சுதர்சன் - களுவாஞ்சிகுடி.
4. கோபாலன் அகி - களுவாஞ்சிகுடி.
5. A. சந்தனமேரி - பருத்தித்துறை.
6. தி. ஜோயல் சத்தியேந்திரா - மட்டக்களப்பு.
7. பி. நீரஜா - பலாங்கொடை.
8. சஜினி சகாதேவன் - கொழும்பு 7.
9. கபிரியேல் அபியூத்.
10. பியூலா சேவியர் - வவுனியா.
11. ஜேசன் ராஜநாயகம் - கந்தானை.
12. ஷேன் பவன் பீட்டர் - கொழும்பு 8.
13. K. சுகாஷினி - ஹெந்தளை.
14. ஏஞ்சலின் மாணிக்கராஜா - மட்டக்களப்பு.
15. எரோன் மாணிக்கராஜா - மட்டக்களப்பு.
16. அ. அருள்சுதன் - மட்டக்களப்பு.
17. ஜே. நிசாந்தன் - மட்டக்களப்பு.
18. ஜே. நிரோஜன் - மட்டக்களப்பு.
19. விமலேந்திரன் ஜேம்ஸ் - மட்டக்களப்பு.
20. முகுந்தன் ஜோன் - மட்டக்களப்பு.
21. ர. ஷெலூமி நிர்மிகா - மட்டக்களப்பு.
22. ஜோன் அருள்சீலன் - செங்கலடி.
23. ஜெயசந்திரன் ஜெருஷா - மட்டக்களப்பு.
24. ஜெயசந்திரன் சஜித் - மட்டக்களப்பு.
25. மு. ஐஸ்வர்யா - வவுனியா.

*சிறுவர் சோலைக்கு பல்வேறு ஆக்கங்களை எழுதி அனுப்பிவைத்த இவர்களுக்கு எமது மனப்பூர்வமான பாராட்டுக்கள் உரித்தாகின்றது!* - ஆசிரியர்.

# சந்தா படிவம்

**நினைவுபடுத்துகிறோம் :**

எமது வெளியீடுகளை புதிதாக பெற விரும்புகிறவர்கள் மற்றும் எமது வெளியீடுகளை தொடர்ந்து பெற்றுவரும் சந்தாதாரர்களுக்காக எமது சந்தா கட்டண விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**ஒரு வருடத்திற்கான சந்தா :**

| | |
|---|---|
| இலங்கையில் உள்ளவர்களுக்கு | - ரூ. 500.00 |
| தென்னாசிய, மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 1,000.00 |
| ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,000.00 |

**உங்கள் சந்தா பணத்தை :**

**மணியோடர் மூலம் பணம் அனுப்புவதாயின்:** "கொடுபட வேண்டிய இடம்" என்ற இடத்தில் சினமன் கார்டின்ஸ் ***(CINNAMON GARDENS POST OFFICE)*** என்றும், பணம் பெறுபவரின் பெயர் என்ற இடத்தில் ***(BACK TO THE BIBLE)*** என்றும் குறிப்பிட்டு அனுப்பவும். **காசோலை மூலம் அனுப்புவதாயின்:** ***(BACK TO THE BIBLE)*** என்ற பெயருக்கு காசோலை எழுதவும்.

மேலே குறிப்பிடப்பட்ட விதங்களில் பணம் அனுப்புவதில் உங்களுக்கு சிரமம் அல்லது சிக்கல்கள் ஏதும் இருக்குமானால் எம்மோடு தொடர்புகொள்ளுங்கள். கனடாவில் உள்ளவர்களுக்கு பணம் அனுப்பிவைக்க விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விபரங்களுக்கு எம்மோடு தொடர்புகொண்டு விசாரிக்கவும்.

எமது வெளியீடுகளை புதிதாக பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள், அல்லது உங்களுக்குத் தெரிந்த புதியவர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்த விரும்பினால் இந்த படிவத்தை தெளிவாக நிரப்பி அனுப்பவும்.

நீங்கள் ஏற்கனவே எமது வெளியீடுகளைப் பெற்றுவரும் சந்தாதாரராயின் உங்கள் பெயர், முகவரியுடன் உங்கள் கணனி இலக்கத்தையும் குறிப்பிட்டு எழுதியனுப்புங்கள்.

உங்கள் முகவரியில் மாற்றம் ஏதும் இருக்குமானால் உங்கள் புதிய முகவரியுடன் உங்கள் பழைய முகவரியையும் குறிப்பிட மறவாதீர்கள்.

(முடிந்தால் ஆங்கிலத்தில் நிரப்பவும்)

**பெயர் :**..................................................................................

**முகவரி :**..................................................................................

..................................................................................


நீங்கள் புதிய சந்தாதாரரா? [ ] இல்லையெனில் உங்கள் **கணனி இல.:** [ ]

இப்படிவத்துடன் 2010ம் வருடத்திற்கான சந்தா பணம் ரூபாய் ..................................................ஐ காசோலை / மணி ஓடர் மூலம் அனுப்பி வைத்துள்ளேன்.

கையொப்பம் : ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சத்தியவசன

## வேத வசன போட்டிக்கான விடைகள் :

**கடந்த சஞ்சிகையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வேத வசன ஆதாரத்துடன் எழுதியவர்களில் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் :**

1. திருமதி J. ஸ்டான்லி எட்வர்ட் - பலாங்கொடை.
2. திருமதி இன்பம் டேவிட் - பலாங்கொடை.
3. திருமதி சுகந்தி டேவிட் - வட்டவளை.
4. திருமதி மேரி டெளசன் - பலாங்கொடை.
5. திருமதி ஆன் சார்லஸ் - நாவலப்பிடிய.
6. திருமதி J. ஆபிரகாம் - நுவரேலியா.
7. S. நவமணி - நுவரேலியா.
8. திருமதி S. அசரியா - கந்தானை.
9. சேவியர் சலோமி - நேரியகுளம்.
10. திருமதி ஜெமிமா ஜேம்ஸ் - வத்தளை.
11. F.E ஜெயகுமார் - கொழும்பு 13.
12. அனிதா சந்திரசேகரன் - கொழும்பு 15.
13. T.L ஜேம்ஸ் - இரத்தினபுரி.
14. P. மேசாக் - மட்டக்களப்பு.
15. திருமதி எமி ஜோன்சன் - இரத்தினபுரி.
16. N. சுமித்ரா - கிளிநொச்சி.
17. J. விமலராணி - இரத்தினபுரி.
18. ஈ. பி. ஆர். ரொஜஸ் - வெள்ளவத்தை.
19. எஸ்தர் தாசன் - பதுளை.
20. திருமதி ஜெயராணி டேனியேல் - கஹவத்த.
21. திருமதி செல்வராணி செல்வராஜா - கொழும்பு-2.
22. கொன்சி தோமஸ் - பத்தனை.
23. ஜெபனேசன் தோமஸ் - பத்தனை.
24. திருமதி மாக்கிறட் கோபாலசிங்கம் - கனடா.
25. திருமதி மேபிள் இதயச்சந்திரா - கனடா.
26. அனா தயாளினி பிரேமமூர்த்தி -கனடா.
27. க. கனகேஸ்வரி - தியத்தலாவை.
28. S. ஜோசப் - தியத்தலாவை.

1. தேவனுடைய ஜனங்களுடன் துன்பத்தை அனுபவிப்பதைத் தெரிந்துகொண்டவன் யார்?
பதில் : ***மோசே*** (எபி. 11:25)

2. எது 'கர்த்தருடைய பாதத்தூள்' என்று எழுதப்பட்டுள்ளது?
பதில் : ***மேகங்கள்*** (நாகூம் 1:3)

3. கோபாக்கினை நாளில் எது நமக்கு உதவிசெய்யாது?
பதில் : ***ஐசுவரியம்*** (நீதி 11:4)

4. வார்க்கப்பட்ட கண்ணாடியைப் போல் கெட்டியாயிருப்பது எது?
பதில் : ***ஆகாய மண்டலம்*** (யோபு 37:18)

5. கர்த்தர் தாம் தெரிந்துகொள்ளும் வழியை யாருக்குப் போதிக்கிறார்?
பதில் : ***கர்த்தர் தமக்கு பயப்படுகிற மனுஷனுக்கு*** (சங்கீதம் 25:12)

6. 'எங்கள் குற்றம் வானபரியந்தம் வளர்ந்துபோயிற்று' என்று ஜெபித்தது யார்?
பதில் : ***எஸ்றா*** (எஸ்றா 9:6)

7. யார் இருளிலிருந்து இருளில் நடக்கிறான்?
பதில் : ***தன் சகோதரனைப் பகைக்கிறவன்*** (1யோவான் 2:11)

8. புத்திமான் எப்பொழுது மௌனமாயிருக்க வேண்டும்?
பதில் : ***தீமையான காலத்தில்*** (ஆமோஸ் 5:13)

9. எதற்காக நம்பிக்கையோடு காத்திருப்பது நல்லது?
பதில் : ***கர்த்தருடைய இரட்சிப்பிற்கு*** (புலம்பல் 3:26)

10. யார் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்?
பதில் : ***முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன்*** (வெளி 20:6)

**ஏதேன் திருமண சேவையானது அநேகருக்குப் பிரயோஜனமாக இருந்தபோதிலும் இம்முறை குறைந்தளவு விண்ணப்ப படிவங்கள் காரணமாக ஜனவரி - மார்ச் 2010 இதழில் வெளிவரவில்லை என்பதை தாழ்மையுடன் தெரிவிப்பதோடு அடுத்த சஞ்சிகையில் எதிர்பார்க்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் - ஆசிரியர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/44/News/2009

To: Rev. T. Thevanesan.

COLOMBO 10.12.09

SRI LANKA 024.00 PB1519 Rs Cts


BACK TO THE BIBLE.

BACK TO THE BIBLE

From :
"Sathiyavasanam"
P.O.Box 1012
Colombo.

27.07.2009 500.00 TSUB NO 3324
REV T THEVANESAN
C A C M CTS SEMINARY
MARUTHANAMADAM
CHUNAKAM N P

# சிறுகதை எழுதும் போட்டி



அருமையானவர்களே, தேவன் உங்களுக்கு கொடுத்துள்ள சிறுகதை எழுதும் தாலந்தை வெளிக்காட்ட ஒரு அருமையான சந்தர்ப்பம். இந்நாட்களில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாட ஆயத்தமாக இருக்கும் நீங்கள் இந்தச் சிறுகதைப் போட்டியில் பங்குபெற, செய்யவேண்டியது இதுதான்.

'A 4' அளவான ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் சிறுகதை எழுதப்பட வேண்டும். (மறுபக்கத்தில், உங்கள் பெயர், விலாசம், வயது, தொலைபேசி என் போன்றவற்றை தெளிவாக நிரப்பி அனுப்புங்கள்.)

இரண்டு பக்கங்களுக்கு மேற்படாத விதத்தில், கிறிஸ்தவ வேதாகம சத்தியத்தை வெளிப்படுத்தும் ஒரு கதையை அல்லது ஒரு சிறு சம்பவத்தை எமக்கு எழுதி அனுப்பிவைக்கலாம்.

சிறுகதைகளின் தலைப்பு எதுவாகவும் இருக்கலாம். சுருக்கமாக, இனிமையாக வேத வசன போதனையைத் தருகின்ற சிறுகதைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

தரமான சிறுகதைகள் சத்தியவசனம் சஞ்சிகையில் பிரசுரமாகும். அத்துடன் தரமான சிறுகதைகளை எழுதி அனுப்பும் உங்களுக்கு அருமையான 'பரிசு' ஒன்றையும் அனுப்பி வைப்போம்.

18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள் உங்கள் பாடசாலையின் பெயரையும், என்ன வகுப்பில் கல்வி கற்கின்றீர்கள் என்பதையும் குறிப்பிட மறவாதிருங்கள்.

18 வயதிற்கு மேற்பட்டவர்கள் உங்கள் அடையாள அட்டையின் இலக்கத்தைக் குறிப்பிட மறக்கவேண்டாம்.

இப்போட்டியில் வயதுவேறுபாடின்றி யாரும் பங்குபெறலாம். ஆகவே சிறார்களே, பெரியோர்களே விரையுங்கள்.

கடைசி திகதி : 2010 ஜனவரி 31 ம் திகதி.

ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. நீங்கள் அனுப்பிவைக்கும் எந்தவொரு சிறுகதையும் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்பட மாட்டாது என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Published by Back to the Bible Broadcast, P.O. Box 1012, Colombo.
Printed at New Ferrine Printers (Pvt) Ltd, No.19 "Saumya Uyana", Halpita, Polgasowita.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org